# தமிழியல்

டாக்டர் சூ. இன்னாசி
ஜே. பீ. விக்டோரியா




சென்னைப்பல்கலைக்கழகம்

தமிழியல்

TAMILOLOGY

முதற் பதிப்பு : 1990

உரிமை : சென்னைப் பல்கலைக் கழகம்

இவ்வெளியீடு குறித்து வாசகர்களது கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

இயக்குநர்
பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005

விலை ரூ. 20/-

அச்சிட்டோர் : அருள்வேல் அச்சகம்,
39, வேம்புலி அம்மன் கோவில் தெரு,
சென்னை-114,

# தமிழியல்

டாக்டர் சூ. இன்னாசி
(பேராசிரியர்—தலைவர்)

ஜே. பி. விக்டோரியா
(ஆய்வாளர்)

கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-5

சென்னைப் பல்கலைக் கழகம்
1990

# TAMILOLOGY

**Dr. S. INNASI**
(Professor & Head)
**J. P. VICTORIA**
(Research Scholar)
Chair on Tamil Christian Literature
University of Madras
Madras-600 005

UNIVERSITY OF MADRAS
1990

# முன்னுரை

தமிழ் மொழிக்குக் கிறித்தவர் செய்துள்ள பணிகளை முறைப் படுத்திக் காட்டும் முயற்சியில் சில தொகுதிகளை வெளியிட வேண்டும் எனத் துறை தொடங்கியதும் திட்டமிடப்பட்டது. அத்திட்டத்தின்படி 'கிறித்தவ நாடக இலக்கியம்' 'கவிதைச் செல்வம்', 'புதினப் படைப்புகள்' ஆகிய நூல்கள் வெளி வந்துள்ளன. அத்திட்டத்தின் நான்காவதாக இது வெளி வருகிறது

இலக்கணம் ஒரு மொழியின் கட்டமைப்பைக் காட்டும். மொழியியல் அதனைப் புதிய நோக்கில் தாய்மொழியாகக் கொண்டிராத பிற மொழியாளருக்கு எளிதில் தெளிய வைக்கும். அகராதிகள் அம்மொழிப் பெருக்கத்தையும் சொல்வளத்தையும் புலப்படுத்தும், மொழிபெயர்ப்புகள் ஒரு மொழியின் இலக்கிய வளத்தைப் பிறமொழிகளுக்கும் பிற மொழிகளின் இலக்கியநயத்தை அம்மொழிக்கும் கொண்டு சேர்த்து வளப்படுத்தும் ஆதலின் இலக்கணவியல், மொழியியல், அகராதியியல், மொழிபெயர்ப்பியல் ஆகிய நான்கனையும் ஒரு மொழியின் அடிப்படைச் சிறப்புத் தன்மைகளாகக் கருதலாம்.

தமிழ் மொழியில் மேற்கண்ட நான்கு கூறுகளும் எவ்வளவில் சிறந்து விளங்குகின்றன எனக் காட்டும் பொது நூலைத் தமிழியல்' எனக் கூறலாம்.

'தமிழியல்' என்னும் இந்நூலின்கண் நான்கு கூறுகளையும் கொண்டு விளங்கும் அனைத்துத் தமிழ்ப் படைப்புகளும் காட்டப்பட்டில. துறையின் நோக்கத்திற்கும் பணிக்கும் ஏற்பக் கிறித்தவர் படைத்தவை மட்டுமே இடம் பெற்றுள்ளன.

கிறித்தவர் படைப்புகளுள்ளும் அனைத்தையும் காட்டி விட்டோம் எனத் துணிதற்கு மனம் ஒருப்பட்டிலது. அரிதின் முயன்றும், அயல்நாட்டு நூலகங்கள், பழஞ்சுவடிக் காப்பகங்கள் சிலவற்றுக்குச் சென்றும், இதுகாறும் வெளிவந்துள்ள நூற் பட்டியல்களைக் கொண்டும் இயன்றவரை காட்டப்பட்டுள்ளன. கிடைத்தவற்றுள்ளும் உறுதி கொள்ளத்தக்கன மட்டுமே சுட்டப் பட்டுள்ளன. காலப்போக்கில் புதியன கிட்டுமேல், எவராலேனும்

சுட்டப்படுமேல் நன்றியுணர்வோடு இணைத்துக் கொள்ளலாம் என்னும் துணிவில் உள்ளனவற்றை மட்டும் தொகுத்துத் தற்பொழுது வெளியிடப்படுகிறது.

இலக்கணவியல் என்னும் பகுதியில் மூல நூல்கள், விளக்க நூல்கள், ஒப்பியல் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்னும் முறையில் வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன.

மொழியியல் என்னும் பகுதியில் விளக்க நூல்கள், ஒப்பியல் நூல்கள் என இருவகைப் பாகுபாட்டில் காட்டப்பட்டுள்ளன.

அகராதியியல் என்னும் பகுதியில் ஒரு மொழி அகராதி, இரு மொழி அகராதி, பன்மொழி அகராதி, வேர்ச்சொல் அகராதி, பொருட் களஞ்சிய அகராதி என வகைப்படுத்திக் காட்டப் பட்டுள்ளன.

மொழி பெயர்ப்பியலில் திருக்குறள், காப்பியம், பிறவகை எனப் பாகுபாடு செய்யப்பட்டுத் தமிழிலிருந்து பிறமொழிகள், பிற மொழிகளிலிருந்து தமிழ் என்றவாறு அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பகுதியிலும் பெரும்பான்மை கருதி முறைப்படுத்தப் பட்டு நூல்களின் பெயர்கள், மொழிகளின் பெயர்கள் ஆகியவை அகர நிரல்படுத்தப்பட்டுள்ளன.

எளிமையாகக் கண்டுணர நூற்பெயர் அகரநிரல், ஆசிரியர் பெயர் அகரநிரல், பிறமொழி - தமிழ்மொழி இணைச்சொற் பட்டியல் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. பிறமொழிப் பெயர் களை ஆங்கில மொழியில் தரும்பொழுது அவ்வந் நூல்களில் கண்டவை மட்டும் இடம்பெறுகின்றன.

இந்நூல் வெளிவரத் துணைநின்ற பல்கலைக்கழகப் பதிப்புத் துறைப் பொறுப்பாளர்கட்கும், நூல்களைப் பார்வையிட அனுமதித்த நூலகப் பொறுப்பாளர்கட்கும் அச்சிட்டுதவிய அச்சகத்தாருக்கும் என்றும் நன்றியுடையோம்.

சென்னை-5<br>
20—12—90

சூ. இன்னாசி<br>
ஜே. பீ. விக்டோரியா

# உள்ளடக்கம்

முன்னுரை

1. இலக்கணவியல் .... .... .... 1

2. மொழியியல் .... .... .... 28

3. அகராதியியல் .... .... .... 35

4. மொழிபெயர்ப்பியல் .... .... .... 49

நூற்பெயர் அகரநிரல் .... .... .... 75

ஆசிரியர் பெயர் அகரநிரல் .... .... .... 78

பிறமொழி—தமிழ்மொழி

இணைச்சொற் பட்டியல் .... .... .... 81

# I. இலக்கணவியல்

இலக்கணவியல் தொடர்பாக எழுந்த நூல்கள் மூல நூல்கள், விளக்க நூல்கள், ஒப்பியல் நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்னும் நால்வகைப் பகுப்பின் கீழ்க் காட்டப்படுகின்றன.

## (அ) மூல நூல்கள்

மூல நூல்கள் என்பவை மொழிக்கான இலக்கணம் கூறும் வகையில் படைக்கப்பட்டவையாகும். கிறித்தவ இலக்கண ஆசிரியர்களுள் அண்டிறீக்கி அடிகளார்தான் முதன் முதலில் தமிழ் இலக்கணம் எழுதியுள்ளார் என்று பா. புவனேசுவரி தம் பிஎச். டி. ஆய்வேட்டில் கூறியுள்ளார். 'அடிகளார், சமயப் பணியாளர்கள் விரைவில் தமிழ் கற்க வேண்டும் என்ற நோக்கத்தில் போர்த்துக்கீசிய மொழியில் தமிழ் இலக்கண நூலொன்றைத் தயாரித்தார். இவ்விலக்கண நூலகத் திற்கென்றே இவருடைய பொறுப்புக்கள் குறைக்கப் பட்டன. இந்நூலை அச்சிட விரும்பிய கிரிமினால் உயிர் துறந்ததால் அம்முயற்சி தடைப்பட்டது. இந்நூலை ஐரோப்பாவிற்கு அனுப்ப விரும்பிய அடிகளார், கப்பல் சென்றுவிட்டதால் அடுத்த ஆண்டு அனுப்பியுள்ளார். இந்நூலைச் செம்மைப் படுத்தும் முயற்சிகளும் தொடர்ந்து நடந்துள்ளன. கி. பி. 1566-ஆம் ஆண்டு வரை இவருடைய இலக்கண நூல் குறித்த செய்திகள் இவர் கடிதங்களில் இடம்பெறுகின்றன. இந்நூல்

கிடைத்திருப்பின் ஐரோப்பியர் தமிழ் கற்ற முறைகளை அறிவிப்பதோடு தமிழ் மொழியியற்றுறைக்கும் பயனுடையதாக இருந்திருக்கும்' என்கிறார்.

அண்டிறீக்கி அடிகளார் நூல் அச்சு வடிவில் காணப் படவில்லை. ஆதலின் இலக்கணங்களை நூற்பா வடிவில் கூறியிருக்கிறாரா அல்லது மற்ற சில ஆசிரியர்களைப் போல் தமிழ் இலக்கணங்களுக்கு உரை வரைந்துள்ளாரா அல்லது விளக்கத்தைத் தந்துள்ளாரா என்பதை அறிய இயலவில்லை.

எனவே அச்சு வடிவில் உள்ள இலக்கண நூல்களைக் கொண்டு பார்க்கும்போது பெஸ்கி எனப்படும் வீரமா முனிவரே இத்துறைக்கு வித்திட்டுள்ளார். இவ்வாசிரியர், இலக்கணத்தை மட்டும் இயம்பாமல், அதற்கான உரை யினையும் செய்துள்ளார்.

## 1. இலக்கணத் திறவுகோல்

இந்நூல் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டதாகும். இந்நூல் 1876-ஆம் ஆண்டு பர்னல் என்பாரால் தரங்கம் பாடி மாதா கோயில் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது. இதன் ஆசிரியர் வீரமாமுனிவர். 'Clavis Humaniorum Litterarum Sublimioris Tamulici Idiomatis' என்பது நூலுக்கு ஆசிரியர் வீரமாமுனிவர் கொடுத்துள்ள முழு இலத்தீன் பெயராகும். Clavis என்றால் திறவுகோல்; Humaniorum என்றால் கல்வி-கலை; Litterarum என்றால் இலக்கண நூல்; Sublimioris என்றால் உயர்வு-சிறப்பு-மாட்சிமை; Tamulici என்றால் தமிழ்; Idiomatis என்றால் மொழி. எனவே, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையில் இந்த நூலினைச் 'செந்தமிழ் இலக்கணத் திறவுகோல்' என அழகுத் தமிழில் அழைக்க லாம் எனச் சுட்டப்படுகிறது.

இந்நூலினுள், குறுக்கம், அளபெடை, பகுபதம் தொகை நிலை, சுட்டும் வினாவும், முக்கால முற்று வினை, ஏவலும் வியங்கோளும், ஈரெச்சம், வினைக் குறிப்பு, உரிச்சொல், கால உரிமை, இடவுரிமை, பண் புரிமை, சொல்லுரிமை, அசை, சீர், தளை, அடி, தொடை, தொடைவிகற்பம், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, வெண்கலிப்பா - கலிவெண்பா, கட்டளைக் கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, துறை, தாழிசை, விருத்தம், மறிநிலையணி, சொல்மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி, பொருளணி போன்ற தலைப்புகளின் கீழ் செய்திகளைத் தந்துள்ளார்.

## 2, கொடுந்தமிழ் இலக்கணம்

இந்நூல் இலத்தீன் மொழியில், பிற நாட்டாருக்கும் சமயத் தொண்டருக்கும் தமிழ் இலக்கணத்தை விளக்க எழுதப்பட்டது. பேச்சுமொழிக்கு என்றே எழுதப் பட்டதாகும்.

வீரமாமுனிவரின் இலக்கண நூல்களுள் முதன்முதல் எழுதப்பட்டதுமன்றி முதற் சிறப்பிற்குரியதும் கொடுந் தமிழ் இலக்கண நூலேயாம். அடிகள் வாழ் நாளிலேயே அவரோடு கருத்து முரண்பாடு கொண்ட தரங்கம்பாடி சமயத்தொண்டரால், மைலாப்பூர் ஆயரின் 1731 ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாளிட்ட அனுமதி பெற்றுப் பதிக்கப்பட்டிருப்பதே அதன் சிறப்பினைக் காட்டும். இந்நூலின்கண் அடிகளாரால் 1728ஆம் ஆண்டு சனவரி 4-ஆம் நாளிட்டு எழுதிய முன்னுரையமைந்திருப்பதால் அதற்கு முன் எழுதப்பட்டதென்பது உறுதி. பரம்பரை இலக்கண, இலக்கியப் பயிற்சியினைப் புலப்படுத்தும் குறிப்புக்கள் அதில் நிரம்ப இருக்கின்றன.

இந்நூல் மூன்று பதிப்புக்களில் வெளிவந்துள்ளது.

(1) கிறிஸ்டோபர் ஹென்றி ஹோர்ஸ்ட் என்பாரது ஆங்கில மொழிபெயர்ப்ப 1806-ஆம் ஆண்டு வேப்பேரியில் பதிப்பிக்கப்படட்டுள்ளது.

(2) ஜா ர் ஜ் வில்லியம் மாகோன் என்பாரது ஆங்கில மொழிபெயர்ப்பு இரண்டாம் பதிப்பாக 1861-ஆம் ஆண்டு வேப்பேரியில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(3) ஜார்ஜ் வில்லியம் மாகோன் என்பாரது மொழிபெயர்ப்பு 1971 ஆம் ஆண்டு மீண்டும் என். கந்தசாமி என்பவரால் தஞ்சை சரசுவதி மஹாலில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் கருத்துக்களை விளக்கும்போது பாமர மக்கள் பேசுகின்ற சொற்களை வைத்தே சான்றுகளைத் தருகிறார். சான்றாக, வினை பற்றிக் கூறும்போது, 'இதெனக்கு வேணும்' என்கிறார். எண்கள் பற்றிக் கூறும்போது,' ஒண்ணு, ரெண்டு, மூணு நாலு, அஞ்சு .... பதினொண்ணு' என்கிறார்.

**3. செந்தமிழ் இலக்கணம்**

இந்நூல் இலத்தீன் மொழியில் பிறநாட்டாருக்கும் சமயத் தொண்டருக்கும் தமிழ் இலக்கணத்தை விளக்க எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் வீரமாமுனிவர்.

இலக்கிய மொழிக்கு என்றே இந்நூல் எழுதப்பட்டதாகும். இந்நூலின்கண் எழுத்துக்கள், பெயர்கள், வினைகள், தமிழ்ப்பாக்கள், தமிழ் இலக்கிய மரபுகள் போன்ற தலைப்புகளில் செய்திகள் உள்ளன.

இந்நூல் மூன்று பதிப்புகளைப் பெற்றுள்ளது.

(1) பெஞ்சமின் கை பாபிங்டன் என்பாரது ஆங்கில மொழி பெயர்ப்பு 1822 - ஆம் ஆண்டு சென்னைக் கல்லூரிப் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(2) இதன் இரண்டாம் பதிப்பு 1917-ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி தூய சூசையப்பர் தொழிற்பள்ளி அச்சுக்கூடப் (St. Joseph's Industrial School Press) பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(3) இதன் மறுபதிப்பு 1974 ஆம் ஆண்டு தஞ்சாவூர் சரசுவதி மஹால் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

வீரமாமுனிவர் தம் இலக்கண நெறிகளை விளக்கும் பொழுது இலக்கண, இலக்கியக் குறிப்புக்கள் சிலவற்றைச் சான்றுகளாகத் தருகிறார்.

சுட்டுப் பற்றிக் கூறும்போது,

'ணஃகான் றஃகா னான்க ணுருபிற்கு'

என்னும் தொல்காப்பிய நூற்பாவைச் சான்றாகத் தருகிறார்.

ஆறாம் வேற்றுமைக்கு இலக்கணம் கூறும்போது.

'நுனசீரடி நோவ நடந்து செலே
லெண தாவியகத்துறை வாயெனுறி'

என்னும் சீவகசிந்தாமணிப் பாடலைச் சான்றாகத் தருகிறார்.

சீர் பற்றிக் கூறும்போது,

'எவ்வதுறைவ துலக - முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு'

என்னும் திருக்குறளைச் சான்றாகத் தருகிறார்.

## 4. தொன்னூல் விளக்கம்

வீரமாமுனிவரால் எழுதப்பட்ட தொன்னூல் விளக்கம் செந்தமிழ் மொழிக்காயினும் தமிழ்நாட்டாருக்காக எழுதப்பட்டது. இந்நூலுக்குத் 'தெருட்குரு' என்ற பெயரும் உண்டு என்பதை,

'அருட்கனல் ஞானர்முத் தமிழ்நூ லுரைத்த வறமுதனாற்
பொருட்களை யாய்ந்துழி வல்லோர் தெரிந்த புதைபொருளின்
மருட்களை நூக்கிப் பொருட்பயன் சூட்டி வழுத்துதலாற்
றெருட்குரு நாமந் தொன்னூல் விளக்கற்குச் சிறந்ததுவே'

என்னும் பாடலால் அறியலாம்.

தொன்னூல் விளக்கம் பாயிரம், சிறப்புப் பாயிரங்களைத் தொடர்ந்து 360 நூற்பாக்களால் செல்கின்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களை ஐந்து அதிகாரங்களிற் சொல்கின்றது. ஒவ்வோர் அதிகாரமும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதி நூற்பா அவ்வதிகாரம் கூறுகின்ற கருத்துக்களைத் தொகுத்துத் தருகிறது.

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கப் பதிப்புக்களாக இன்று நமக்கு அறியக்கிடைப்பது ஆறு ஆகும். அவை பின்வருவனவாம்.

(1) வித்துவான் களத்தூர் வேதகிரி முதலியாரால் பார்வையிடப்பட்டு, புதுவை மாநகரத்தில் 1838-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

(2) அமிர்தநாதர் என்பாரால் நாகையில் 1864-ஆம் ஆண்டில் Gatlogy Lithography Press'-இல் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

(3) ஜி. மெக்கேன்ஜி காபன் அய்யர் என்பாரால் அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

(4) ஜி மெக்கென்ஜி காபன் அய்யர் பதிப்பே, மீண்டும் அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடத்தில் இரண்டாம் பதிப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(5) டாக்டர் ச. வே. சுப்பிரமணியனால் தமிழ்ப் பதிப்பகத்தில் 1978-ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிடப் பட்டுள்ளது.

(6) 1984-ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரால் அப்பர் அச்சகத்தில் மெக்கென்ஜி காபன் அய்யர் பதிப்பு மீண்டும் புகைப்படப் படியெடுத்து வெளியிடப்பட்டுள்ளது.

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தில் சில இடங் களில் தம் இலக்கணங்களுக்கு மேற்கோளாக முன்னோரின் இலக்கண நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளார்.

யாப்பின் பாயிரத்திற்கு இலக்கணம் கூறும்போது,

'நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்து
மெல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்'

என்னும் நன்னூல் நூற்பாவைச் சான்றாகத் தருகிறார்

வீரமாமுனிவர் தம் இலக்கணத்திற்கு உரை கூறும் போது எடுத்துக்காட்டுகளைத் தருவதும், ஓர் அதிகாரத் தில் கூறிய கருத்துக்களை இறுதி நூற்பாவின்கண் தொகுத்துக் கூறுவதும் இயல்பாகும்,

நூற்பாவில் சிலவற்றைக் கூறிவிட்டு, நூற்பாவில் கூறாததை உரையில் கூறும் மரபும் இவரிடம் உண்டு. சான்றாக, பிரபந்தங்களுக்கு இலக்கணம் கூறும்போது நூற்பாவின்கண் 35 பிரபந்தங்களின் இலக்கணமும், உரையின்கண் 56 பிரபந்தங்களின் இலக்கணமும் கூறு கிறார்.

உடம்படு மெய்யைப் புணர்பெழுத்து என்கிறார். பிற இலக்கண ஆசிரியர்கள் இஈஐவழி யவ்வும் என்று கூற இவர்,

'முதல் ஈற்று உயிரும் மொழியே சேர்புளி
இஈஎஐ ஈறு இயையும் யவ்வே
மற்றை உயிர்க்கீழ் வகரம் புணரும்'

இஈ என ஐ ஆகியவற்றோடு எகரத்தையும் இணைக்கின் றார்.

## (ஆ) விளக்க நூல்கள்

விளக்க நூல்கள் என்பன தமிழ் இலக்கணங்களுக்கு உரையோ அல்லது விளக்கமோ தருவனவாகும். ஆபிரகாம் அருளப்பன், ஏ. எச். ஆர்டன், ஆரோக்கிய நாதன், இசரயேல், இராபர்ட் அந்தர்சன், சூ. இன்னாசி, கழங்கைத்தம்பிரான், சீகன்பால்கு, தாவீதுயோசேப்பு, தேவநேயன், வ. பொன்னையா, ஜி. யு. போப், வி. மரிய அந்தோணி, முத்துச்சாமிப்பிள்ளை, மோசசு பொன்னையா, ஜான் லாசரஸ் போன்றோர் இத்துறையில் ஈடுபட்டோராவர். இவர்கள் எழுதியுள்ள நூல்களாகப் பார்வைக்குக் கிட்டியவை 23 ஆகும்.

### 1. இடையும் உரியும்

இந்நூலினை மோ. இசரயேல் எழுதியுள்ளார். இந்நூல் முதற்பதிப்பாக 1977-ஆம் ஆண்டு சிந்தாமணி வெளியீட்டாளரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் இடைச்சொல் ஓர் ஆய்வு, சங்க இலக்கியத்தில் இடைச்சொற்கள், இடைச்சொல்—தொல்காப்பியம் நன்னூல் ஒப்பீடு, தொல்காப்பியத்தில் அக்கும் இக்கும், வற்றுச் சாரியை, அத்துச் சாரியை, ஆன் சாரியை, எதிர்காலக் குறியீடு உம்/ம், ஏவல் வினை விகுதி உம்/ம், ஈயும் ஏயும், உந்தீற்று வினைச்சொற்கள், அசைச் சொற்கள், முன்னிலை அசைகள், மியா ஓர் அசைச் சொல்லா ? ஆகின்றா ? சின் ஓர் அசைநிலையா ? அன்றோ மோவென் முன்னிலை அசைச்சொல், மாவென் கிளவி, உரிச்சொல் ஓர் ஆய்வு, உரிச்சொல் பெயரும் சொல்வகை வரலாறும், சங்க இலக்கியத்தில் உரிச்சொற்கள், உரிச்சொல்—தொல்காப்பியம் நன்னூல் ஒப்பீடு, உரிச்சொல்லும் சொற்பொருளியலும், உரிச்சொற் கொள்கைகள் ஆகியவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## 2. இலக்கண ஆய்வு பெயர்ச்சொல்

இந்நூலினை மோ. இசரயேல் எழுதியுள்ளார். இந்நூல் முதல் பதிப்பாக 1975ஆம் ஆண்டு சிந்தாமணி வெளியீட்டாளரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள், தமிழில் சொல்வகை, பெயர்ச்சொல் இலக்கணம், அமைப்பு, பாகுபாடு, மூவிடப் பெயர்கள், படர்க்கைப் பெயர்கள், உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, சுட்டும் வினாவும், எகரவினா, எண்ணுப் பெயர், தொல்காப்பியத்தில் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், மாரீற்றுப் பெயர்ச் சொற்கள், வினையடைப் பெயர்கள், பெயரினாகிய தொகை, வேற்றுமை இலக்கணம், வேற்றுமை மயக்கம், ஓடு உருபு, ஆன் உருபு, சாரியைகள், இக்கு என்பது ஒரு சாரியை ஆகுமா, ஆகு பெயர் போன்றவற்றை விளக்கியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்பொழுது மொழியியலாளர்களின் கருத்துக்களையும், சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றையும் சான்றுகளாகத் தருகிறார்.

## 3. இலக்கண ஆய்வு வினைச்சொல்

இந்நூலினை மோ. இசரயேல் எழுதியுள்ளார். இந்நூல் முதற் பதிப்பாக 1971-ஆம் ஆண்டு சிந்தாமணி வெளியீட்டாளரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள், வினைச்சொல் இலக்கணம், அமைப்பு வகைகள், செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று, ஏவல் வினையில் வினாவின் ஆற்றல், வியங்கோள் வினை முற்று, மார் ஈற்று வினைச்சொற்கள், செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டுச் சொல், குறிப்பு வினை, துணை வினைகள், தமிழில் கால வேறுபாடு, நிகழ்காலத்தின் தோற்றமும் வளர்ச்சியும், அலங்கடையும் இலங்கடையும் போன்றவற்றை விளக்கியுள்ளார்.

### 4. இலக்கணச் சிந்தனைகள்

இந்நூலினை சூ. இன்னாசி இயற்றியுள்ளார். இந்நூல் முதற்பதிப்பாக 1984ஆம் ஆண்டு வளனருள் வெளியீட்டாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலினுள், ஓர் குறிப்பு, ஓர் கிளவி, ஓர் உரையாசிரியர், மொழிமுதற் குற்றியலிகரம், தொல்காப்பியம் காட்டும் இலக்கிய வகைகள், சிந்து இலக்கியம் - ஓர் இலக்கண விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணத்தில் சில மொழியியற் கூறுகள் என்னும் தலைப்புகளில் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்போது இலக்கண நூல்களையும் காப்பியப் பாடல்களையும் தருகிறார். சான்றாக, மொழி முதற் குற்றியலிகரம் பற்றிக் கூறும்போது தேம்பாவணியில், 'யாக்கோப்பு' என்னும் சொல்லினை 'உலவ இயாக்கோபன்' என்று இகரஞ் சேர்த்து யகர முதன் மொழியாகப் பயன்படுத்தியுள்ளதைக் காட்டுகிறார்.

### 5. உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதற்பாகம்)

இந்நூலினை ஞா. தேவநேயன் எழுதியுள்ளார். இந்நூல் 1964ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் தொடரியல், விடுகதை, பெயர்கள், பெயரெச்சக்கிளவியம், வினையெச்சக்கிளவியம், தனி வாக்கியம் போன்றவற்றின் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

தனிவாக்கியம் பற்றிக் கூறும்போது, 'மயில்ஆடுகிறது' என்றாற் போன்ற ஒரே எழுவாயும், ஒரே முற்றுப் பயனிலையும் உள்ள வாக்கியம் என்கிறார்.

6. சில இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்

ஆபிரகாம் அருளப்பன் இந்நூலின் ஆசிரியர் ஆவார். இந்நூல் 1971 ஆம் ஆண்டு அருள் அச்சகத்தினரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள், தமிழ் எழுத்து வைப்புமுறை, எழுதத்துப்பிறப்பு, தமிழ் வல்லின மெய்களும் கால்டுவெல் ஐயர் கருத்தும், உடம்படுமெய், தமிழ் எழுத்து வரி வடிவம், ஆகுபெயர், அன்மொழித்தொகை, அன்மைப் பொருளும் இன்மைப்பொருளும் ஆகிய கட்டுரைகள் உள்ளன.

கருத்துக்களை விளக்கும்பொழுது சில காப்பியப் பாடல்கள் தரப்படுகின்றன. சான்றாக, தமிழ் எழுத்து வரிவடிவத்திற்கு இலக்கணம் கூறும்போது,

'வழுவத மரனு மண்ணுங் கல்லு
மெழுதிய பாவையும் பேசாவென்பது'

என்னும் மணிமேகலை அடிகளைச் சான்றாகத் தருகிறார்.

7. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்

இந்நூலினை ஞா. தேவநேயன் எழுதியுள்ளார். இந்நூல் 1971ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்பு, கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் அணியியற் சொற்கள், உயர்திணைப் பொருளுக்கு அஃறிணையுவமம், வாழ்க்கையியல்பு, அஃறிணைப் பொருளுக்கு அஃறிணையுவமம், தண்டனை

வகை, ஒருபொருட் பலசொற்கள், நல்லார் இயல்பு போன்றவற்றின் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

நன்னூல் நூற்பாவையும், சங்க இலக்கியப் பாடல்கள் போன்றவற்றையும் சான்றுகளாகத் தருகிறார்.

ஒரு பொருட் பல சொற்கள் பற்றிக் கூறும் போது,

'கொளுந்தாள் முதலையும் இடங்களுங் காரமும்'

என்னும் குறிஞ்சிப் பாட்டுப் பாடல் தொடரைச் சான்றாகத் தருகிறார்.

## 8. தமிழ் இடைச்சொற்கள் (Tamil Clitics)

இந்நூலினை எஸ். ஆரோக்கியநாதன் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இந்நூல் முதல் பதிப்பாக திருவனந்தபுரம், திராவிட மொழியியற் கழகத்தாரால் 1981ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தான், ஓ போன்ற இடைச்சொற்களைக் கூறிச் சான்றுகளைத் தருகிறார்.

## 9. தமிழ் இலக்கணம் (Rudiments of Tamil Grammar)

இந்நூல் இராபர்ட் அந்தர்சன் ஆங்கிலத்தில் எழுதிய இலக்கண நூல் ஆகும். இந்நூல் 1821-ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலினுள், பெயர்கள், வினைகள், வேற்றுமைகள், எண்கள், இடைச்சொற்கள் போன்றவற்றை விளக்கியுள்ளார்.

அந்தர்சன் தம் இலக்கண நூலில் வீரமாமுனிவர் இயற்றியுள்ள கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் முதலியவற்றின் கருத்துக்களையும் சான்றுகளையும் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். அவற்றுள், சில பின்வருவன.

என் பற்றிக் கூறும்போது,

| ஒருமை | பன்மை |
|---|---|
| கிடா | கிடாக்கள் |
| வழி | வழிகள் |

என்னும் சொற்களைச் சான்றுகளாகத் தருகிறார்.

வினை பற்றிக் கூறும்போது,

**ஒருமையில்**

| | | கொடுந்தமிழ் | செந்தமிழ் |
|---|---|---|---|
| தன்மை | | கிறேன் | கிறேன்-கின்றேன்-ஆநின்றேன் கின்றனேன்-ஆநின்றனேன் |
| முன்னிலை | | கிறாய் | கிறாய்-கின்றாய்-ஆநின்றாய் கின்றனை-ஆநின்றனை-கின்று, ஆநின்று |
| படர்க்கை | ஆண்பால் | கிறான் | கிறான்-கின்றான்-ஆநின்றான் |
| | பெண்பால் | கிறாள் | கிறாள்-கின்றாள்-ஆநின்றாள் கின்றனள்-ஆநின்றனள் |

**பன்மையில்**

| | | | |
|---|---|---|---|
| தன்மை | கிறோம் | கிறோம் | கிறோம்-கின்றோம்-கின்றோம் கின்றனேம்-கின்றாம்-கின்றனம்-ஆநின்றோம் |

முன்னிலை கிறீர்கள் கிறீர்கள் கிறீர்-கிறீர்-கின்றனிர்
, கிறார்கள் கிறார்-கின்றார்-
கின்றனர்-கின்றன-கின்ற

**10. தமிழ் இலக்கணம் (Crammatica Damulica)**

இந்நூலினை சீகன்பால்கு எழுதியுள்ளார். இந்நூல் 1985-ஆம் ஆண்டு விட்டன்பெர்க் மார்ட்டின் லூதர் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ் இலக்கணங்களைப் பழைய எழுத்து வடிவ முறைகளுடன் எழுதியுள்ளார். அவற்றுள் சில பின் வருவன.

இவர் மெய்யெழுத்துக்களைக் கூறும்போது புள்ளி இல்லாமல் எழுதியுள்ளார். சான்றுகளாக, 'அவள, பாவம' என்பனவற்றைக் கொள்ளலாம்.

வேதம் என்னும் சொல்லைப் பற்றிக் கூறும்போது, அதன் வரிவடிவம் குறில் போன்றே 'வெதம' என்றவாறு காணப்படுகிறது.

**11. தமிழ் இலக்கணம்**

இந்நூல் வி. மரிய அந்தோணியால், க. திருமாறனின் துணையோடு எழுதப்பட்டுள்ளது. இந்நூல் 1954-ஆம் ஆண்டு விருதுநகர் மலர்விழி வெளியீட்டாளரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின்கண், எழுத்து, சொல், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், வடசொல், திசைச்சொல், பகுபத உறுப்புக்கள், சொற்றொடர், புணர்ச்சி, யாப்பு, அணி போன்ற தலைப்புக்களில் செய்திகள் தரப்பட்டுள்ளன.

**12. தமிழ் இலக்கணம் (A Tamil grammar)**

இந்நூலினை ஜான் லாசரஸ் ஆங்கிலத்தில் எழுதி

யுள்ளார். இந்நூல் இரண்டு பதிப்புக்களாக வெளிவந்துள்ளது. முதல் பதிப்பு 1878-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இப்பதிப்பு கிடைக்கப் பெறவில்லை. இரண்டாம் பதிப்பு 1985-ஆம் ஆண்டு பயனீர் புத்தக நிறுவனத்தாரால் பதிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார். எழுத்தியல், சொற்பிறப்பியல், தொடரியல் ஆகிய பிரிவுகளில் செய்திகளைக் கூறியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்போது ஆங்காங்கே திருக்குறள், நன்னூல், பழமொழிகள் பொன்மொழிகள், சமயம் சார்ந்த கருத்துக்கள் ஆகியவற்றைச் சான்றுகளாகத் தருகிறர்.

## 3. தமிழ் இலக்கணத் தெளிவு

இந்நூல் தாவீது யோசேப்பு என்பாரால் இயற்றப்பட்டது. இந்நூல் 1893 ஆம் ஆண்டு வேப்பேரி என்.பி. சி.கே. நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் எழுத்தியல், சொல்லியல், தொடரியல், யாப்பியல், பொருள்கோள், அணியியல் என்னும் தலைப்புக்களில் செய்திகளைக் கூறுகின்றது.

இந்நூலில் இலக்கணத்துக்குச் சான்றுகள் கூறும்போது தொல்காப்பியம், நன்னூல், முத்துவீரியம், தண்டியலங்கார நூற்பாக்களைச் சான்றுகளாகத் தருகிறார்.

## 14. தமிழிலக்கணமும் உரையமைப்பும்

இந்நூலினை வ. பொன்னையா எழுதியுள்ளார். இந்நூல் 1958ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திர சாலையினரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் வாக்கிய ஆக்க மரபு, சொல்லாக்க மரபு, புணர்ச்சி ஆக்க மரபு, பெயர்ச்சொல் ஆக்க மரபு, வினைச்சொல் ஆக்க மரபு, இடைச்சொல் ஆக்க மரபு, உரிச்சொல் ஆக்க மரபு, வாக்கியப் பகுப்பு, வாக்கிய மாற்றம், வாக்கியத் தொகுப்பு, தன் கூற்றும் பிறன் கூற்றும், வழாநிலையும் வழுவமைதியும், இலக்கணச் சொற்களும் இலக்கணத் தொடர்களும், நிறுத்தக்குறிகள், கதையெழுதுதல், பெயர்த்து எழுதுதல், நயமெழுதுதல் போன்ற தலைப்புக்களில் செய்திகள் தரப்பட்டுள்ளன.

வாக்கிய ஆக்க மரபு பற்றிக் கூறும்போது 'வாயாலே கேள்' 'மூக்காலே பார்' என்பனவற்றைத் தகுதி நோக்கித் திருத்திப்பெழுதுக எனக்கேட்டு 'வாயாலே பேசு; மூக்காலே முகர் என விடை காட்டுகிறார்.

எதிர்ச்சொல் பற்றிக் கூறும்போது, 'ஒறுப்பு-மலிவு' 'நற்றாய் - செவிலித்தாய்' போன்றவற்றைச் சான்று களாகத் தருகிறார்.

**15. தொல்காப்பிய உருபனியல்**

டாக்டர் மோ. இசரயேல் தொல்காப்பிய உருபனியல் (The Treatment of Morphology in Tolkappiyam) என்னும் பிஎச். டி. (Ph.D.) ஆய்வேட்டினை ஆய்வு நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூல் ஆங்கிலத்தில் உள்ளது.

இந்நூல் 1973 ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பிய உருபனியல் என்னும் நூலினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார். 1. பெயர்கள் 2. வினைகள் 3. பிற என்று கூறி, பிற என்னும் பகுதியில் இடைச்சொல், உரிச்சொல், தொகை, இரட்டைக்கிளவி போன்றவற்றை விளக்கியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்பொழுது ஆங்காங்கே மொழியியலாளர் கருத்துக்களையும், உரையாசிரியர் கருத்துக்களையும் சான்றுகளாகத் தருகிறார்,

வினைமுற்றுகளுக்கு இலக்கணம் கூறும்போது,

> 'மார் என்னும் விகுதி எதிர்காலத்துக்கு மட்டும் உரியது என்கிறார்'

என்னும் கால்டுவெல் கருத்தைச் சான்றாகத் தருகிறார்.

பெயர்களுக்கு இலக்கணம் கூறும்போது அதற்கு 'விளி கொள்வதன் கண் விளியோடு எட்டே என்று கூறியது என்னையெனின், எல்லாப் பெயர்ச் சொற்களும் விளியேற்பதில்லை; பல பெயர்கள் ஏற்கும்; சில பெயர்கள் ஏலா. ஆதலால் விளியேற்கும் பெயரின்கண் உள்ள விளியோடு எட்டு என்றார்' என்னும் சேனாவரையர் கருத்தைச் சான்றாகத் தருகிறார்.

## 16 தொல்காப்பியம் சொல்லதிகாரம்—உரைக்கோவை (முதற்பாகம்)

இந்நூலினை ஆபிரகாம் அருளப்பனும், வி.ஐ. சுப்பிரமணியமும் சேர்ந்து பதிப்பித்துள்ளார்கள். இந்நூல் முதற்பதிப்பாக 1963 ஆம் ஆண்டு அருள் அச்சகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு போன்ற நான்கு இயல்களில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாசிரியர்கள் இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், அரசு ஆகியோரின் உரைகளைக் கூறியுள்ளார்கள்.

**17 தொல்காப்பிய யாப்பு உறுப்பு உரை**

பேராசிரியர் ஆபிரகாம் அருளப்பன் இந்நூலின் ஆசிரியர் ஆவார். இந்நூல் 1968 ஆம் ஆண்டு அருள் அச்சகத்தினரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் தொல்காப்பியம் காட்டும் யாப்பின் உறுப்புகளாகிய எழுத்து, அசை, சீர், ஓசை, தளை, அடி, தொடை போன்றவற்றை விளக்கியுள்ளார்.

**18 நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை—எழுத்ததிகாரம்**

இந்நூல் மோசசு பொன்னையா எழுதியதாகும், 1968 ஆம் ஆண்டு சியோன் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் போன்றவற்றைக் கூறியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்போது பல இலக்கண நூல்களையும், மொழியியலாளர்களின் கருத்துக்களையும், சங்க இலக்கியப் பாடல்கள் பல வற்றையும் சான்றுகளாகத் தருகிறார். அவற்றுள் சில பின்வருவன.

பகாப்பதத்துக்கு இலக்கணம் கூறும்போது, 'இவ் வாசிரியர் கூறும் விளக்கத்தோடு ஓராற்றான் ஒத்து வருகிறது' என்று கூறி, ஆக்கெட் கருத்தைச் சான்றாகத் தருகிறார்.

குற்றுகர வீற்றுச் சிறப்பு விதிக்கு இலக்கணம் கூறும்போது, 'தொண்டு' என்னும் மலைபடுகடாம் பாடற் சொல்லைச் சான்றாகத் தருகிறார்.

**19 நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை—சொல்லதிகாரம்**

இந்நூல் மோசச் பொன்னையா எழுதியதாகும். இந்நூல் 1971 ஆம் ஆண்டு மதுரை சீயோன் பதிப்பகத் தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் பெயரியல், வினையியல், பொதுவியல் இடையியல், உரியியல் போன்றவற்றைக் கூறியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்போது பல இலக்கண நூல்களையும், மொழியியலாளர்களின் கருத்துக்களையும் சங்க இலக்கியப் பாடல்கள் பல வற்றையும் சான்றுகளாகத் தருகிறார்.

**20 நன்னூல் மூலமும் அகப்பொருள் மூலமும் புறப்பொருட்கிலக்கியத்தோடு வெண்பாமாலை மூலமும்**

இந்நூல் அ. முத்துச்சாமிப் பிள்ளையால் பதிப் பிக்கப்பட்ட இலக்கணம் ஆகும் இந்நூல் 1756 ஆம் ஆண்டு சென்னைக் கல்விச் சங்கத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூலினுள் நன்னூல், அகப்பொருள், புறப் பொருள் வெண்பாமாலை போன்றவற்றின்மூல நூற் பாக்கள் தரப்பட்டுள்ளன.

**21. நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்**

இந்நூலினை கூழங்கைத் தம்பிரான் என்பார் இயற்றியுள்ளார். இந்நூலை 1980 ஆம் ஆண்டு மேற்கு ஜெர்மனி, ஹைடல்பர்க் பல்கலைக்கழகத் தெற்காசிய நிறுவனத்தின் வழியாக அ. தாமோதரன் பதிப் பித்துள்ளார்.

இச்சுவடியின் அமைப்பு வரலாறு பற்றிப் பதிப்பாசிரியர் பின்வருமாறு கூறுகிறார். ''காலக்கோலத்தினால் இந்திய மண்ணிலிருந்து பயணமாகி ஐரோப்பிய நூலகங்களில் குடியேறிவிட்ட எண்ணற்ற தமிழ்ச் சுவடிகளுள் ஒன்றே நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும் ஆகும். இது பிரிட்டிஷ் நூலகத்தின் (The British Library) கீழ்த்திசைப் பகுதியில் (Oriental Department) பத்திரமாக இருக்கிறது. இந்த நூலகத்தின் கையெழுத்துப் பட்டியலில் 'Handlist' என்ற பெயரில் 'Orient 2724' என்ற எண்ணுடன் பதிவாகி உள்ளது. இது ஒரு காகிதப் பிரதி. மையினால் (Ink) எழுதப்பட்டுள்ளது. சிதைவு சிறிதுமின்றி நன்றாகப் பைண்டு செய்து வைக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் இருநூற்று நாற்பத்தொன்று வரை பக்கமிடப்பட்டு முழுமையான நிலையில் இருக்கிறது. பக்கத்திற்குச் சராசரி இருபத்தைந்து வரிக்குக் குறையாமல் எழுதப் பட்டுள்ளது. நூற்றெட்டாவது பக்கம் வரையில் கோடிடாமலும் அதற்குப் பின்னர் கோடிட்டும் அடித்தல் திருத்தல் அதிகமின்றி எளிதில் படிக்குமாறு தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இடையிடையே சிற்சில இடங்களில் வேறு மையினால் திருத்தப்பட்டிருக்கிறது. இது ஓலைச் சுவடியோ அல்லது ஆசிரியரின் மூலக்கையேடோ (Autograph) அல்ல.

டாக்டர் ஆர்தர் கோக்பர்னல் என்பவருடைய சொந்த நூலகத்தைச் சேர்ந்தது. அவர் விற்பனைக்குப் பிறகு, இன்னும் சரியாகச் சொன்னால் 18-1-1884 முதல் பிரிட்டிஷ் நூலகத்தின் கீழ்த்திசைப் பிரிவில் இந்தச் சுவடி இருந்து வருகிறது. 1884 வது ஆண்டு பிப்ரவரி மாதம் ஆர். பி. எஸ். (R.P.S.), ஜி. சி. டி. (G. C. T.) என்ற முதலெழுத்துக்களையுடைய இரு நூலக உதவியாளர்களினால் இந்தச் சுவடி பரிசோதிக்கப் பட்டு ஏட்டு (Folio) முறையில் ஒன்று முதல் நூற்றிருபத்

தொன்று வரையில் புதிதாக எண்ணிடப்பட்டுள்ளது. மேலே விவரிக்கப்பட்ட இந்தச் சுவடியோ இப்போது நூலுருவில் முதன் முதலாக வெளிவருகிறது.''

## 22 பொதுத்தமிழ் இலக்கணம்

ஏ. எச். ஆர்டன் 'பொதுத்தமிழ் இலக்கணம்' (A Progressive Grammar of Common Tamil) என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 1934 ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்க நிறுவனத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூலில் ஒப்பியல், வேற்றுமை, வினைப்பெயர், முதலியன பற்றிய தமிழ் இலக்கணச் செய்திகளைக் கூறுகின்றார்.

இந்நூலினை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இவற்றுள் அதிகமாகப் பழமொழிகள் கையாளப்பட்டுள்ளன. ஒப்பியல் பற்றிக் கூறும்போது,

> 'சாஷிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன்
> காலில் விழுவது நல்லது'

என்னும் பழமொழியினைச் சான்றாகத் தருகிறார்.

## 23 வேர்ச்சொற் கட்டுரைகள்

இந்நூலினை ஞா. தேவநேயன் எழுதியுள்ளார். இந்நூல் 1973 ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின்கண், அம், அர், இல், இன், உ, உம், உல், உன், எது, ஏ, ஒல், ஓ, என்னும் வேர்ச்சொற்களையும், உயிர் மெய் முதல் வேர்ச்சொற்களையும், சுல் குத்தற் கருத்து வேர், துல் பொருந்தற் கருத்துவேர் போன்ற வற்றின் செய்திகளையும் கூறியுள்ளார்.

இந்நூலினை விளக்கும்பொழுது தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றின் நூற்பாக் களையும், சங்க இலக்கியப் பாடல்களையும் சான்று களாகத் தருகிறார். அவற்றுள் ஒன்று பின்வருவதாகும்.

ஒல் என்னும் சொல்லைப் பற்றிக் கூறும்போது,

'ஓசை நிறைந்த கடல்'

என்னும் திருவாசகப் பாடல் தொடரைச் சான்றாகத் தருகிறார்.

## (இ) ஒப்பியல் நூல்கள்

ஒப்பியல் என்பது ஏதேனும் இரு தமிழ் இலக்கண நூல்களை ஒப்பிட்டாய்வதாகும். இத்துறைக்கு வித் திட்டவர் இ. சாமுவேல் பிள்ளை என்பராவர்.

**தொல்காப்பியம் நன்னூல்**

இந்நூலினை எழுதியவர் இ. சாமுவேல் பிள்ளை. இந்நூல் 1858-ஆம் ஆண்டு கிறித்தவ சங்கத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் தொல்காப்பியம் கூறும் இருபத்தேழ் இயல்களை நன்னூல் கூறும் பத்து இயல்களோடு ஒப்பிட்டாய்ந்துள்ளார்.

'கசதப ஒழிந்த ஈரேழன் கூட்டம்
மெய்ம் மயக்குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபால் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே'

என்னும் நன்னூல் நூற்பாவை,

'அம்மூ வாறும் வழக்கியன் மருங்கின்
மெய்மயக் குடனிலை தெரியுங் காலை'
'தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மான மில்லை'

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களோடு ஒப் பிட்டுள்ளார்.

உரிச்சொல்லும் அதன் காலமும் (Adverb of Time) பற்றிக் கூறும்போது அதற்கு இப்போ, இப்போது, இப்போழ்து, அப்பொழுது, அப்போ, எப்போ, எப்போது, எப்பொழுதும், எப்போதாவது, எப்போதாயினும், இன்றைக்கு, நாளைக்கு, நாளையினன்றைக்கு, பிற்பாடு, முன்பு, முன்னர், நேற்று, நேற்றைக்கு, முந்துநேற்று, முந்தாநாள், மாதாந்தரம், வருஷாந்தரம், நாள்வட்டம் கிழமைவட்டம், நாள்தோறும், தினந்தோறும், வாரந்தோறும், இப்போதே, உடனே, இன்னம், இன்னும், சிலவேளை, ஒருவேளை, இந்நேரம், அந்நேரம், எந்நேரம் அன்றாடம், அன்றன்று, ஒன்றை விட்டொருநாள், ஒருபோதும், ஒருகால், ஒருக்காலும், ஒருவிசை, ஒருதடவை, இரண்டுதரம், க்ஷணம், ஒருநிமிஷம் போன்ற சொற்றொடர்களைச் சான்றுகளாகத் தருகிறார்.

### (ஈ) மொழிபெயர்ப்பு நூல்கள்

மொழிபெயர்ப்பியல் என்பது தமிழ் இலக்கணங்களை மற்ற மொழிகளில் மொழிபெயர்த்து வழங்குவதாகும். இத்துறைக்கு வித்திட்டவர்கள் டீ. ஆல்பர்ட், ஜி. யு. போப், ஜான் லாசரஸ், ஹென்றி பவர் போன்றோராவர்.

**1. தமிழ் இலக்கணச் சுருக்க வினா-விடை**

தமிழ் இலக்கண நூல் சுருக்க வினாவிடை என்னும் தலைப்பில் ஜி. யு. போப் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1985-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது

இந்நூலில், எழுத்தியல், சொல்லியல், சொற்றொடர் என்னும் மூன்று இயல்களில் செய்திகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன.

இந்நூல் வினா, விடை முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

எழுத்தியல் பற்றிக் கூறும்போது,

'நெட்டெழுத்து எவை ?' என்னும் வினாவிற்கு
'ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ,' என்பது பதிலாக அமைகிறது, இதனை,
*'Which are the long vowels ?*
*These seven long vowels'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

சொல்லியல் பற்றிக் கூறும்போது,

'பெயர்ச்சொல் ஆவது என்ன ?' என்னும் வினாவிற்கு
'பொருளின் பெயரைக் காட்டுவது பெயர்ச்சொல் ஆம்.
உ-ம், தேவன், நரகம், மரம், வீடு, தன்மை' என்பது விடையாக அமைகிறது, இதனை,
*'Whal is a noun?*
*A noun is a word which expresses the name of a thing'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

## 2. தொல்காப்பியம்

டீ. ஆல்பர்ட் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1985 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூலினுள் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னும் இரண்டு அதிகாரங்களில் உள்ள நூற்பாக்களை ஒரு பக்கத்தில் கூறி அவ்வவ் நூற்பாக்களின் மொழி பெயர்ப்பை மறுபக்கத்தில் கூறியுள்ளார். அவற்றுள் சில பின்வருவன.

'ணகாரை முன்னர் மகாரங் குறுகும்'

என்னும் நூற்பாவை,

*'The /m/ is shortened after the /n/'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

'கடியென் கிளவி மென்மையும் ஆகும்'
என்னும் நூற்பாவை,

*'The morpheme kati means
tenderness also dense'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

3. நன்னூல்

ஜி. யு. போப் நன்னூலினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1878-ஆம் ஆண்டு ஹாபர்ட் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் எழுத்தியல், சொல்லியல் என்னும் ஈரியல் செய்திகள் கூறப்படுகின்றன.

கடவுள் வணக்கம் பற்றிக் கூறும் பொழுது,

'பூமலி அசோகின் புனை நிழல் அமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம்புவன் எழுத்தே'

என்னும் நன்நூல் நூற்பாவை,

*'Invoking the aid of the four-faced (Arugha), who
dwells in the delightful shade of the flower-abounding
Asoka I hope to treatfully of orthography'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

4. நன்னூல்

ஜான்லாசரஸ் நன்னூலை மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1977-ஆம் ஆண்டு தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

'உயிரும் உடம்புமாம் முப்பது முதலே'
என்பதனை,

*'The primary letters consist of the thirty
vowels and consonants'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

*விளம்பிய பகுதி வேறாதலும் விதியே'*

என்பதனை,

*'Even Roots of verbs may under go change'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

5. நன்னூல்

ஹென்றி பவர் நன்னூலை மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1972-ஆம் ஆண்டு தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பாயிரநூற்பாவை மொழிபெயர்த்துள்ள முறை பின்வருவதாகும்.

'அறம் பொருள் இன்பம் வீட்டை அடைதல் நூற்பயனே'

என்பதனை,

*'The four cardinal blessings, or ultimate objects to be aimed at in the study of a work, are the attainment of virtue, wealth, pleasure and heaven'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

6. புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருள் வெண்பாமாலையை ஜி. யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1973-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தும்பையரவம் (Presents to the Troops) பற்றிக் கூறும்போது,

*'வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும்*
*கொல்களிறும், மாவும் கொடுத்தளித்தான்—பல்புரளி*
*நன்மணித் தின்டேர் நயவார் தலைபணிப்பப்*
*பன்மணிப் பூணான் படைக்கு'*

என்னும் புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாவை,

*'Badges of victory, lands, precious treasure farms*
*Murderous elephants, and horse the king distributes*
*His enemies, tho' strong in horses and chariots tremble when*
*They hear the movements of the jewel bearing king'*

என மொழிபெயர்த்துள்ளார்.

# II. மொழியியல்

ஒரு மொழியின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு ஆகியவற்றை அறிவியல் சார்ந்த அணுகுமுறை கொண்டு விளக்குவதே மொழியியல் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தமிழக அறிஞர்கள் இத்துறையில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தனர். தமிழ் மொழியை மொழியியல் கண்கொண்டு நோக்கும் நூல்கள் பல தோன்றத் தொடங்கின. அவ்வகை நூல்களைப் படைக்கும் முயற்சியில் கிறித்தவரும் ஈடுபட்டுள்ளனர்.

கிறித்தவர் படைத்த மொழியியல் தொடர்பான நூல்களை (அ) விளக்க நூல்கள், (ஆ) ஒப்பியல் நூல்கள் என இரு கூறுபடுத்தலாம்.

## (அ) விளக்க நூல்கள்

மொழியின் இயல்புகளை உள்ளவாறு விளக்குவன விளக்க நூல்கள் என்னும் பகுதியில் அடங்கும். அவ்வகையில் கிறித்தவர் படைத்த நூல்களாக எட்டு நூல்கள் காணப்படுகின்றன

### 1. உலக முதன்மைச் செம்மொழி

இந்நூலினை ஞா. தேவநேயன் இயற்றியுள்ளார். முதல் பதிப்பாக 1966-ஆம் வருடம் நேசமணி பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கருத்துக்களை விளக்கும்பொழுது உலகமொழிகளின் இலக்கணத்தைத் தமிழோடு ஒப்பிட்டாய்ந்துள்ளார். அவற்றுள் சில பின்வருவன.

தன்மைப் பெயரை விளக்கும்போது தமிழ்ச் சொல்லை, தெலுங்குச் சொல்லோடு ஒப்பிட்டுள்ளார்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| நான் | நேனு |

தமிழ்ச் சொற்களை வேதமொழிச் சொற்களோடு ஒப்பிட்டுள்ளார்.

| தமிழ் | வேதமொழி |
|---|---|
| அரவம் | ரவா |
| நலம் | நலா |

## 2. எழுத்தியல்

எழுத்தியல் என்னும் நூலினை சு. இன்னாசி எழுதியுள்ளார். இந்நூல் 1983-ஆம் ஆண்டு சென்னை அபிராமி பப்ளிகேஷன் நிறுவனத்தாரால் மூன்றாம் பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் பொதுவியல், இலக்கணவியல், ஒப்பியல், வரலாற்றியல், குறிப்பியல் என இயல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்போது பல இலக்கண நூல்களையும், மொழியியலாளர்களின் கருத்துக்களையும், சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றையும் சான்றுகளாகத் தருகிறார்.

வரி வடிவ மாற்றம் பற்றிக் கூறும்போது, 'கணக்கெழுதுவோர் ஈகாரத்தை எழுத இகரத்தில் மேலே சுழித்தும், வட்டம் என வருமிடத்தில் 'ட்,ட' இரண்டனையும் ஒன்றாக இணைத்துமெழுதியதைத் தற்பொழுது கைவிட்டு விட்டாலும் முன்னர் ஏற்றுக் கொண்டோம். இவ்வாறு வரி வடிவ மாற்றத்தை எப்பொழுதும் ஏற்றுக் கொண்டே வந்திருப்பதால் எளிமை, வசதி ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படுத்துவது மொழிக்கு ஆக்கமே எனக் கருதுகின்றனர்' என்கிறார்.

3. சிங்கள மொழியில் திராவிட மூலம்

எஸ். ஞானப்பிரகாசர் எழுதிய இந்நூல் 'Eigentum and verlag der Internatinol zeitschrist, Anthropos st. Gabriel-Molding hei wien, Dsterreich Machitheristen Buchdruckerel in wien, vii, Mechitharistengasse-4' என்னும் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின்கண் சிங்கள மொழிச் சொற்களைத் திராவிட மொழிச் சொற்களோடும், தமிழ் மொழிச் சொற்களோடும் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்.

4. சொல்லியல்

சொல்லியல் என்னும் நூலினை சூ. இன்னாசி எழுதியுள்ளார். இந்நூல் 1985-ஆம் ஆண்டு அபிராமி பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தாரால் மூன்றாம் பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் மொழியியல், பெயரியல், வினையியல் பொதுவியல், ஒப்பியல், ஒழியியல், குறிப்பியல் என்னும் இயல்கள் உள்ளன.

காலம் பற்றிக் கூறும்போது, 'நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு தெளிவாக இல்லையென்பதால், இறந்தகாலம், இறவாக் காலம் என்ற இருவகைப் பாகுபாடுகளே இருந்திருக்கலாம் என்பர். கோத்த மொழியில் இரு காலங்களே இன்றும் காணப்படுகின்றன' என்னும் கோ. சுப்பையா என்பாரின் கருத்தைச் சான்றாகத் தருகிறார்.

உரிச்சொல் பற்றிக் கூறும்போது, 'உரிச்சொல் செய்யுட்குரியன எனக்குறிப்பிடுவது பற்றி நால்வகைச் சொற்களும் செய்யுட்குரியனவாய் வருதலின் செய்யுட்குரியன உரிச்சொல் என்றது பொருந்தாது என்று கூறி இராமானுசக் கவிராயர் தம் விருத்தியுரையில் மறுப்பர்'' என்கிறார்.

## 5. தமிழ் மொழி

தமிழ் மொழி என்னும் நூலினை ஜி.யு. போப் எழுதியுள்ளார். இந்நூல் 1911-ஆம் ஆண்டு ஏழாம் பதிப்பாக ஆக்ஸ்போர்டு கலரண்டன் பிரஸ் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் கருத்துக்களை விளக்கும்போது பழமொழியினையும் திருக்குறளையும் எடுத்தாள்கிறார். மூன்றாம் வேற்றுமை பற்றிக் கூறும்போது அதற்கு,

*'நுணலுந் தன்வாயாற் கெடும்'*

என்னும் பழமொழியினைச் சான்றாகத் தருகிறார்.

வாக்கிய வழு அமைப்பு பற்றிக் கூறும் போது,

*'கற்க கசடற கற்பவை; கற்றபின்*
*நிற்க அதற்குத் தக'*

என்னும் திருக்குறளையும்,

*'அட்டாலும் பால்சுவையிற் குன்றா தனவல்ல*
*நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும்*
*மேன் மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலுந்*
*தான் மிக்க வெண்மை தரும்'*

என்னும் மூதுரைப் பாடலையும் சான்றுகளாகத் தருகிறார்.

## 6. தமிழ்மொழி வரலாறு (பொதுவியல்)

மோசசு பொன்னையா இந்நூலினை இயற்றி உள்ளார். இந்நூல் முதல் பதிப்பாக 1972-ஆண்டு மதுரை சீயோன் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூலினுள் மொழி வரலாற்றோடு ஆங்காங்கே சில இலக்கணச் செய்திகளும் இடம் பெறுகின்றன. செந்தமிழ், கொடுந்தமிழ், நெடுங்கணக்கு எழுத்துமுறை போன்றவற்றைக் கூறியுள்ளார்.

**7. திராவிடக் கல்வி**

மார்க் காலின்ஸ் இந்நூலை ஆக்கியுள்ளார். இதனைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

கருத்துக்களை விளக்கும்போது இலக்கண நூற்பாக் களையும், இலக்கியப் பாடல்கள் பலவற்றையும் சான்று களாகத் தருகிறார்.

வகரம் நான்மொழிக்கு ஈறாதல் பற்றிக் கூறும்போது,
'வகரக் கிளவி நான்மொழி ஈற்றது'

என்னும் தொல்காப்பிய நூற்பாவைச் சான்றாகத் தருகிறார்.

## (ஆ) ஒப்பியல் நூல்கள்

ஒரு மொழியின் தன்மையைப் பிறிதொரு மொழியின் தன்மைகளோடு ஒப்பிட்டுக் காண்பது ஒப்பியல் எனலாம். இம்முறையில் தமிழ் மொழியின் தன்மைகளைப் பிற மொழிகளின் தன்மைகளோடு ஒப்பிட்டுக் காணும் நோக்கில் சில நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

**1. திராவிட மொழிகளின் இலக்கண மூலம்**

ஜுல்ஸ் பிளாக் திராவிட மொழிகளின் இலக்கண மூலம் என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் 1954-ஆம் ஆண்டு தீகன் கல்லூரி நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் தமிழ் மொழி இலக்கணமாகிய பால், வேற்றுமை, சுட்டுச் சொற்கள், உரிச்சொற்கள், இடைச் சொற்கள், தன்மை, முன்னிலை பிரதிப் பெயர்க்குரிய சொற்கள், வினையெச்ச விகுதிகள் போன்றவற்றைத் திராவிட மொழிகளோடு ஒப்பிட்டாய்ந்துள்ளார்.

வினையெச்ச விகுதிகள் பற்றிக் கூறும்போது,

| | | |
|---|---|---|
| தமிழ் | — | ஓட் |
| கூர்க் | — | எக் |
| கோண்டு | — | ஹர் |

போன்ற சொற்களைக் கூறுகிறார்.

**2. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு**

சாமுவேல் திராவிட மொழிகளின் ஒப்பாய்வு என்னும் நூலினை இயற்றியுள்ளார்.

இந்நூலினுள் பொதுவியல், ஒலியனியல், பெயரியல், வினையியல் என்னும் தலைப்புகளில் செய்திகளை விளக்கியுள்ளார்.

இவ்வாசிரியர் கருத்துக்களை விளக்கும்போது மொழியியலாளர்களின் கருத்துக்களையும் சங்க இலக்கியப்பாடல்கள் பலவற்றையும் சான்றுகளாகத் தருகிறார்.

**3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**

இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 1959ஆம் ஆண்டு, புலவர்கள் கா. கோவிந்தன், திருவத்திபுரம் புலவர் தா. சிங்காரவேலு ஆகியோரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுச் சென்னை வள்ளுவர் பண்ணை நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூன்றாம் பதிப்பு 1982ஆம் ஆண்டு, புலவர் கா. கோவிந்தன், க. ரத்னம் ஆகியோரால் பார்வையிடப்பட்டு, சென்னை வள்ளுவர் பண்ணை நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்கிலப் பதிப்புகளாக 1956, 1961, 1976ஆம் ஆண்டுகளில் ரெவ.ஜே.எல். வெயிட், டி. ராமகிருட்டிண பிள்ளை ஆகியோரால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலினுள் தோற்றம், ஒலி, வேர்ச்சொற்கள், பெயர், ஊர், இடப்பெயர், வினைச்சொல், சொல்லியல், ஒருமைப்பாடு போன்றவற்றை விளக்கியுள்ளார்.

கால்டுவெல் கருத்துக்களை விளக்கும்பொழுது பல மொழிகளோடு ஒப்பிட்டாய்ந்துள்ளார்.

உகர, ஊகார உயிர் எழுத்துக்கள் பற்றிக் கூறும்போது அதற்கு, 'இலக்கண முறைக்கொத்து எழுதப்பெறும் தெலுங்கில் ஒவ்வொரு சொல்லும் எந்த விதி விலக்குமின்றி, உயிரைக் கொண்டே முடிதல் வேண்டும். அவ்வாறு இயற்கையாக உயிரெழுத்தினைக் கொண்டு முடிக்கப்பெறும். புதுக்கன்னடத்தில் அகரத்துடன் முடியும் சொற்களுடன் உகரம் சேர்க்கப்பெறும் என்கிறார். சான்றுகளாக,

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| பல | பலவு |
| சில | செலவு |

என்னும் சொற்களைத் தருகிறார்.

செமிட்டிக் ஒருமைப்பாடு பற்றிக் கூறும்போது, 'செமிட்டிக் மொழியில் தன்மை இடப்பெயர் திராவிட இடப்பெயரோடு மதிப்பிடத்தக்க ஒருமைப்பாடு கொண்டுள்ளது. ஏப்ரு மொழியின் 'அனி' என்பதனோடும் 'ஏப்ரு' 'அனோகி' எகிப்திய 'அனுக்' பாபிலோனிய 'அனகு' 'ஆனக்' 'அன்கு' ஆகியவற்றின், முன்னிலையாகிய 'அன்' என்பதனோடும் குறிப்பாக யூதச் சிரிய 'அனா' கிறித்தவச் சிரய 'எனோ', ஏதோப்பிய அராபி 'அனா' என்பனவற்றோடும், திராவிட 'நா'வை ஒப்பிடுவதால் அவ்வுண்மை புலனாகும். அராபிக் மொழியில் பன்மை 'அனா' என்ற அவ்வொருமை வடிவோடு 'ன'கரம் இணைவதால் பிறக்கிறது. ஆகவே 'நா' என்ற தமிழ்த் தன்மைப் பன்மையை, அராமிக் பன்மையாகிய 'அனென்' என்பதனோடும் ஒப்பிடல் பொருந்தும்' என்கிறார்.

# III. அகாரதியியல்

சொற்களை அகர நிரலாக அமைத்து அவற்றுக்கான பொருள்களைக் கூறுவது அகராதியாகும். தொல்காப்பிய உரியியல் தொடங்கி நிகண்டுகள் வழியாகச் சொற்களுக்குப் பொருள் கூறும் முறை தமிழில் வழங்கியது. அம்முறையைப் பின்பற்றி, மேனாட்டாரின் அகராதியியல் வளர்ச்சியைப் பின்புலமாகக் கொண்டு, தமிழுக்கென எழுந்த முதல் அகராதியாம் சதுரகராதியைத் தந்தவர் கிறித்தவராகிய வீரமாமுனிவர். அவரைத் தொடர்ந்து தமிழுக்கான அகராதிகளைப் படைப்பதில் தொடக்க காலத்தில் பெரும்பங்கு பெற்றோர் மேனாட்டிலிருந்து தமிழகம் போந்த கிறித்தவரே எனலாம். அவர்கள் இயற்றியுள்ள அகராதிகளை (1) ஒருமொழி அகராதி, (2) இருமொழி அகராதி, (3) பன்மொழி அகராதி, (4) வேர்ச்சொல் அகராதி, (5) பொருட்களஞ்சிய அகராதி என வகைப் படுத்தலாம்.

## (அ) ஒருமொழி அகராதி

ஒருமொழி அகராதி ஒரு மொழியில் உள்ள சொற்களுக்கு அதே மொழியில் பொருள் தருவதாகும்.

### 1. அகராதிப் பேர்ச் சுவடி.

இவ்வகராதியினை 1732இல் சீகன்பால்கு தொகுத்து உள்ளார். இவ்வகராதிச் சுவடி முதலாம் வகுப்பு, ரெண்டாம் வகுப்பு என்னும் பகுப்புகளில் அமைந்துள்ளது. இந்நூல் இன்னும் அச்சேறவில்லை.

## 2. சதுரகராதி

வீரமாமுனிவர் இவ் அகராதியை இயற்றியுள்ளார். இவ்வாசிரியர் இயற்றிய சதுரகராதியை சூ. இன்னாசி 1979ஆம் ஆண்டு வீரமாமுனிவர் ஆய்வுக்கழகத்தின்வழி பதிப்பித்துள்ளார். அதுவே மீண்டும் 1989ஆம் ஆண்டு மாதா பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியினை அறிஞர் பட்டத்திற்காக ஆய்வு செய்தவர் சூ. இன்னாசி.

இவ்வகராதி பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

அளவு என்னும் வகையான் இந்நூற்குப் பெயர்ப் பொருத்தம் அமைகிறது. உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் தன்மையிற் பெயர் பெற்றொளிர்கிறது. பாயிரத்தில்,

> 'பெயர்பொரு டொகைதொடை பிரிந்த நான்முகத்
> துயர்பொரு டேர்டர்பத முரைத்து நூல்வழங்க
> மதுர வனாதி வளந்தரச்
> சதுரக ராதி சாற்றுது மன்றே'

எனக் கூறியவாறு ஆதி வளந்தரப் படைத்த நான்முக நூலினுக்குச் சதுரகராதிப் பெயரமைந்தது. இவ் வகராதியின் பெயர்ப்பகுதியில் 12, 187 சொற்களுக்குப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன

## 3. சிலோன் தமிழ் அகராதி

சிலோன் தமிழ் அகராதியினைப் புருனோ என்பார் வெளியிட்டுள்ளார்.

## 4. டிக்ஷனேரியம் தமுலிகம்

சீகன்பால்கு இவ்வகராதியினை கி.பி. 1712 இல் தொகுத்துள்ளார். இந்நூல் அச்சிடப்படவில்லை.

5. தமிழ் அகராதி

இவ்வகராதியினை எம். ஏரியல் என்பார் வெளியிட்டுள்ளார்.

6. தமிழ் உரைநடை அகராதி

சீகன்பால்கு இவ்வகராதியினை 1726ஆம் ஆண்டு தொகுத்து, செருமானிய மொழியில் அடைவும் செய்து உள்ளார். 'Prosaisch Tamulisches Lexicon' என்னும் இந்நூல் இன்னும் அச்சேறவில்லை.

7. தமிழ் ஒப்பியல் அகராதி

இவ்வகராதியை 1970-72ஆம் ஆண்டு எச்.எஸ் டேவிட் என்பார் வெளியிட்டுள்ளார்.

## ஆ) இருமொழி அகராதி

இருமொழி அகராதி என்பது ஆங்கிலம்-தமிழ் தமிழ்-ஆங்கிலம், தமிழ்-மலையாளம், தமிழ்-தெலுங்கு, தமிழ்-கன்னடம் என்றாற்போல ஒரு மொழியில் உள்ள சொற்களுக்கு வேறொரு மொழியில் பொருள் தருவதாகும்.

1. ஆங்கிலம்-தமிழ் அகாரதி

இவ்வகராதியினை 1842ஆம் ஆண்டு நைட், ஸ்பால்டிங் ஆகியோர் படைத்துள்ளார். இந்நூல் இரண்டாம் பதிப்பாக 1844இல் ஹட்சிஸ்சு என்பாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு மேலும் அப்பாசாமிப் பிள்ளையால் விரிவு செய்யப்பட்டு 1888ல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

2. ஆங்கிலம்-தமிழ் அகராதி

இவ்வகராதி ஊச் டர்லனி என்பாரால் 1851 ஆம் ஆண்டு வேப்பேரியில் வெளியிடப்பட்டுள்ளது.

3. ஆங்கிலம்-தமிழ் அகராதி

இவ்வகராதியினை பிரதர்டன், டி. என்பார் 1852ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கத்தின்வழி வெளியிட்டுள்ளார்.

4. ஆங்கிலம்-தமிழ் அகராதி

பெர்சிவல் இந்நூலினை இயற்றியுள்ளார். இந்நூலினை 1953ஆம் ஆண்டு சென்னைப் பள்ளி நூற் சங்கமும் (The Madras School Books), இலக்கியச் சங்கமும் (Literature Society) இணைந்து பதிப்பித்து உள்ளன. இந்நூலின்கண் முதலில் ஆங்கிலச் சொற்களைக் கூறி அதற்கு விளக்கம் தரும்போது தமிழ்ச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

5. ஆங்கிலம்-தமிழ் அகராதி

இவ்வகராதி 1852இல் ஹோப்ரோ, ஸ்பெர்ஸ் நெய்டர், பிரதர்டன் முதலியோரால் உருவாக்கப் பட்டுள்ளது.

6. ஆங்கிலம்-தமிழ் அகராதி

இவ்வகராதி வில்லியம் நெலின்சு என்னும் சிதம்பர பிள்ளையால் 1858இல் வெளியிடப்பட்டுள்ளது.

7. ஆங்கிலம்-தமிழ் அகராதி

இவ்வகராதி, பெர்ன்வெல் என்பாரால் 1975ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

8. தமிழ்-ஆங்கிலம் அகராதி

ராட்லர் 1830ஆம் ஆண்டளவில் தமிழ்-ஆங்கிலம் அகராதியினைத் தொகுத்துள்ளார். இது நான்கு தொகுதிகளையுடையது. நான்கு தொகுதிகளும் முறையே 1834, 1837, 1839, 1841-ஆம் ஆண்டுகளில் சென்னையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

9. தமிழ்-ஆங்கிலம் அகராதி

'தமிழ் - ஆங்கிலம் அகராதி' என்னும் நூலினை வின்சுலோ இயற்றியுள்ளார். இந்நூல் 1979, 1983ஆம் ஆண்டுகளில் ஏசியன் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலின்கண் தமிழ் மொழி, வான சாஸ்திரம் (Astronmical), கட்டுக்கதை (Mythological), அறிவியல் (Scientific) போன்ற துறைகளில் உள்ள சொற்களுக்குப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

10. தமிழ்-ஆங்கிலம் அகராதி

ஜோவான் பிலிப் பப்ரீஷியஸ் 'தமிழ் ஆங்கில அகராதி' என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 1972ஆம் ஆண்டு லூத்தரன் சபையினரால் (Evangelical Lutheran Mission Publishing House) பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலின்கண் மூலச் சொற்களையும், பகுபதங்களையும் தொடர் மொழிகளையும், பேச்சு வழக்குச் சொற்களையும், வடமொழியிலிருந்து தமிழில் வந்த சொற்களையும் கையாண்டுள்ளார்.

11. தமிழ்-ஆங்கிலம் அகராதி

ஜி. யூ. போப் இதனை இயற்றியுள்ளார். இந்நூல் 1985ஆம் ஆண்டு ஏசியன் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இவ்வகராதியில் பழமொழிகள் பலவற்றை எடுத்தாள்கிறார்.

12. தமிழ்-சிங்களம் அகராதி

இவ்வகராதி 1972ஆம் ஆண்டு என். டி. பெரிஸ் என்பாரால் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

13. தமிழ்-லத்தீன் அகராதி

இந்நூலினை சீகன்பால்கு 1715—16 ஆம் ஆண்டளவில் வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது.

## 14. தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி

வீரமாமுனிவர் இயற்றியது தமிழ்-லத்தீன் பேச்சு மொழி அகராதி.

தமிழ்-லத்தீன் பேச்சுமொழி அகராதி 'யில் முதலில் தமிழ்ச் சொற்கள் தமிழ் அகர நிரல் முறையில் நிறுத்தப் பட்டு அவற்றிற்குரிய பொருள்கள் இலத்தீன் மொழியில் கூறப்படுகின்றன. சிலவிடங்களில் பிரெஞ்சிலும், போர்த் கீஸிலும் பொருளுக்கு விளக்கம் தரப்படுகிறது. ஏறத் தாழ 9,000 சொற்கள் இடம் பெறுகின்றன. கொடுந் தமிழ்ச் சொற்களுக்கான அவ்வகராதியில் உள்ள சொற் கள் பேச்சிலும் எழுத்திலும் அடிக்கடி பொதுமக்களால் பயன்படுத்தப்படுவனவே' என முன்னுரையில் கூறி யிருப்பதற்கேற்பப் பேச்சுமொழிச் சொற்கள் நிறைய இடம்பெறுகின்றன.

## 15. தமிழ்-லத்தீன் அகராதி

தமிழ்ச் சொல்லுக்கு இலத்தீன் சொல்லால் பொருள் கூறும் இந்த அகராதியின் ஆசிரியர் ஆர். பி. குரி பாதிரி யாராவர்.

## 16. தமிழ்-பிரஞ்சகராதி

மூசே, துபே ஆகியோர் இந்நூலினை இயற்றியுள் ளனர். இந்நூல் 1981ஆம் ஆண்டு ஏசியன் நிறுவனத் தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலின்கண் தமிழ்ச் சொற்களுக்கு விளக்கம் தரும்போது பிரஞ்சு மொழிச் சொற்களைத் தருகின்றனர்.

## 7. தமிழ்-போர்த்கீஸ் அகராதி

அந்தோணி டி பிரோயன்சா இயற்றியது இவ் வகராதி. இவ்வகராதி 'கி.பி. 1679இல் அம்பலக்காட்டில் அச்சிடப்பட்டது. 16,546 சொற்கட்குப் பொருள் கூறப் பட்டிருக்கிறதெனினும் அவற்றின் பொருள் போர்த்கீஸ்

அல்லது இலத்தீன் மொழியில் கூறப்பட்டுள்ளது. தனிநாயகம் அடிகளால் 1966 இல் மலேயாப் பல்கலைக் கழகத்தில் மறுபதிப்பு அச்சிடப்பட்டுள்ளது. அவ் வகராதியில் முதலில் தமிழ்ச் சொற்களையமைத்து அவற் றிற்குப் பொருள் கூறியிருப்பினும் அச்சொற்கள் தமிழ் அகரநிரல் முறையில் செம்மையாக அமையவில்லை. தமிழ்ச் சொற்களுக்குப் போர்த்துகீஸிய அகரநிரல் முறை பின்பற்றப்பட்டுள்ளது. அதன்படி A-யை முதலாகக் கொண்ட சொற்களுள் ab ஒலிகளையுடையவை முதலி லும் ach ஒலிகளை உடையவை அடுத்தும், பின் ag, al, am ஆகிய ஒலிகளையுடையவையும் பிறவும் அமைக்கப் பட்டிருக்கின்றன. சான்றாக A ஒலியுடையவற்றுள் ab ஒலிகளைக் கொண்ட (1) அபாரணம் (2) அபத்தம் (3) அபவாதம் (4) அபசானம் (5) அபாயதந்திரம் (6) அபசக்கியம் (7) அபாயம் (8) அபையம் (9) அபெஷை (10) அபேக்ஷிக் குகை (12) அபிமந்திரியாத (13) அபிமந் திரிப்பிக்கிறது என்பன தொடக்கத்தில் இடம்பெறு கின்றன. தமிழ் அகரநிரற்படி அமைய வேண்டுமாயின் அபசக்கியம், அபசானம், அபத்தம், அபவாதம், அபாய தந்திரம், அபாயம், அபாரணம், அபிமந்திரியாத, அபிமந்திரிப்பிக்கிறது, அபெஷை, அபேக்ஷிக்கிறது, அபேக்ஷிக்குகை, அபையம் என நிற்க வேண்டும். இவ் வாறே Ach ஒலிகளை உடைய அச்சம், அச்சரம், அச்சானியம் Pro அக்கியானம், அச்சாரம் போன்றவை முதலில் இடம்பெற்ற பின் A-g ஒலிகளையுடைய அகல், அகலம் போன்றவை பின்னர் இடம் பெறுகின்றன. தமிழ் நிரற்படி அகரத்தை முதலாகவும் ககரத்தை இரண்டாவதாகவும் உடைய சொற்கள் இடம் பெற்ற பின்னரே, அகரமும் சகரமும் சேர்ந்த சொற்கள் இடம் பெற்றிருத்தல் முறை.

## 18. தமிழ்மொழிக் கையேடு

### (A Hand Book of the Tamil Language)

ஜி. யூ. போப் இந்நூலினை எழுதியுள்ளார். இந்நூல் 1989ஆம் ஆண்டு ஏசியன் நிறுவனத்தாரால் ஏழாம் பதிப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலின்கண் ஆங்கிலச் சொற்களும் அவற்றுக்கான பொருள்கள் தமிழிலும் தரப்பட்டுள்ளன.

**19. பிரெஞ்சு-தமிழ் அகராதி**
**(F rcais-Tamoul Dictionarie)**

இவ்வகராதி ஏ. பிலின் என்பாரால் 1831ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

20. **மலாய்-தமிழ் அகராதி**

இவ்வகராதி எம். ஆரோக்கியசாமி என்பாரால் 1962ஆம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது.

## (இ) பன்மொழி அகராதி

ஒரு மொழியில் உள்ள சொற்களுக்கு இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் பொருள் கூறுவது பன்மொழி அகராதியாகும்.

1. **ஆங்கிலம்-தமிழ்-தெலுங்கு-இந்தி சொன்மாலை**

அந்தோணி இந்நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 1980ஆம் ஆண்டு சென்னை மெமோரியல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

2. **இலத்தின்-பிராஞ்சு-தமிழ் அகராதி**

மூசே, துபே ஆகியோர் இந்நூலினை இயற்றியுள்ளனர். இந்த அகராதியில் முதலில் இலத்தீன் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னர் அவற்றிற்கு

நேரான பொருளுடைய பிரெஞ்சுச் சொற்களும், தமிழ்ச் சொற்களும் முறையே இரண்டாவதாகவும் மூன்றாவதா கவும் தரப்பட்டுள்ளன. இவ்வகராதியில் மூன்று மொழி கள் இடம் பெற்றிருப்பதால் மூன்று மொழிகளிலும் நூலுக்குப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இது, 1930 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய அகராதியாகும். 1846ஆம் ஆண்டு புதுச்சேரி மாதா கோயில் அச்சகத்தில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முகப்புப் பக்கத் தில், தமிழ் பிரெஞ்சு அகராதியைப் படைத்த துறவியர் மூசே (Mousset), துபே (Dupuis) என்னும் இருவராவர் என்னும் செய்தி பிரெஞ்சு மொழியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

### 3. போர்த்கீஸ்-லத்தீன்-தமிழ் அகராதி

வீரமாமுனிவர் இயற்றியது போர்த்கீஸ்—லத்தீன்—தமிழ் அகராதி. இவ்வகராதியில் போர்த்கீஸியச் சொற் கள் அனைத்திற்கும் இலத்தீன் சொற்கள் அமைய வில்லை. சிலவற்றிற்குப் போத்கீஸியச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் மட்டுமே கொடுக்கப் பட்டுள்ளன. ‘Adooraccas’ என்னும் சொல்லுக்கு ஆராதனை, அர்ச்சனை, வணக்கம், வழிபாடு ஆகிய தமிழ்மொழிப் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிலவற்றிற்குப் பொருள் கூறுங்கால் வாக்கியங்களில் அமைத்துக் காட்டியும் பொருள் விளக்கப்படுகிறது.

### 4. மொழி அகராதி
(Dictionary of Language and Linguistics)

ஹார்ட்மேன் இவ்வகராதியினை இயற்றியுள்ளார். இந்நூல் 1976ஆம் ஆண்டு இலண்டன் அறிவியல் நிறுவனத்தாரால் (Applied Science Publishers Ltd., London) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வகராதியில் உலக மொழிகள் அனைத்திலும் காணப்படுகின்ற மொழியியல் சொற்களும் அதற்கான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

## (ஊ) வேர்ச்சொல் அகராதி

ஒரு மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் எப்படி உருவாயிற்று என்றும், அவை காலப்போக்கில் என்னென்ன மாறுதல்களை அடைந்தது என்பதை ஆராய்ந்து ஒவ்வொரு சொல்லுக்குரிய இடம் எதுவென்று குறித்துக் காட்டுவதே வேர்ச்சொல்லியலின் குறிக்கோளாகும். அவற்றைக் காட்டும் அகராதியே வேர்ச்சொல் அகராதி.

### 1. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி

ஞா. தேவநேயப் பாவாணர் இந்நூலை இயற்றியுள்ளார். இந்நூல் 1985-ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

'இந்நூலின்கண் ஒரு மொழியிலுள்ள சொற்களையெல்லாம் திருந்திய வடிவில் தொகுத்து அவற்றின் முதலெழுத்துக்கள், நெடுங்கணக்கு அல்லது குறுங்கணக்கு முறையில் அமைய அச்சொற்களை வரிசைப்படுத்தி, ஒவ்வொரு சொற்கும் அடிப்படைப் பொருளையும் வழிநிலைப் பொருளையும் ஏரணத்திற்குப் பொருந்த வரலாற்று முறையிற் குறித்து, இலக்கியமிருப்பின் இருவகை வழக்கினின்றும் அஃதின்றேல் உலக வழக்கினின்றும் அப்பொருள்கட்குச் சான்றாக மேற்கோள்கள் எடுத்துக் காட்டி இறுதியில் அவ்வச் சொல்லின் வேரொடு கூடிய வரலாற்றை வரைந்து இனச்சொற்களையும் காட்டுவதால் முழு நிறைவான சொற்பிறப்பியல் அகரமுதலியாம்' எனக் கூறப்படுகிறது.

உலக வழக்கு, இலக்கிய வழக்கு என்னும் இருவகை வழக்கிலுள்ள எல்லாத் தொழிலும், கலையும் அறிவியல் பற்றிய எல்லாச் சொற்களும் இயன்றவரை இவ்வகர முதலியிற் சேர்க்கப்பட்டுள்ளன. திருமுகம், திருமந்திர வோலை, ஆவணம், கல்வெட்டு, நாட்குறிப்பு, பற்று முறி, எழுதப்பட்டனவும் எழுதப்படாதனவுமான நாட்டுப்புறப் பாடல் கதை, விடுகதை, தனிப்பாடல் ஆகிய யாவும் இலக்கியத்துள் அடங்கும் என்பபடுகிறது.

பண்டையப் புலவர், அரசர், அமைச்சர், படைத் தலைவர், முதலிய பெருமக்களும், மதுரை திருவரங்கம் முதலிய நகரங்களும், குமரி, குடமலை முதலிய மலைத் தொடர்களும், பறம்பு, பழனி முதலிய குன்றுகளும், பஃறுளி, குமரி முதலிய ஆறுகளும், பெயர் பெற்ற பறந்தலைப் பெயர்களும் இலக்கியப் புகழ் பெற்ற பிற இடப்பெயர்களும் இவ்வகராதியில் இடம்பெற்றுள்ளன.

## 2. சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி

ஞானப்பிரகாசர் இவ்வகராதியினை இயற்றியுள்ளார். இந்நூல் 1938-ஆம் ஆண்டு இலங்கைத் திருமகள் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியர், 'இதன் முன் தமிழ் அகராதி செய்தோர் எல்லாம், ஒவ்வோர் சொல்லிற்கும் உரிய பொருட்களை ஆராய்ந்து மேலும் மேலும் சிறப்புற விளக்கினாரே அன்றி, சொற்களுக்குப் பிறப்பிடமாய் நின்ற அடிகளை முறைப்படி தேடிக் கண்டு அவ்வவற்றின் கீழ் அவ்வவற்றின் கிளைச் சொற் கூட்டங்களை அமைத்தார் அல்லர். அது மட்டும் அன்று தமிழடிகளை அறுதியிடுதற்கு உரிய கட்டளைகளை வகுப்போரும் எக்காலத்தாவது தோன்றியிராமையால், தமிழிற்கு அடிகள்தாம் உளவா என்று ஐயுறவுக்கும் இடன் உண்டாயிற்று. ஆயிரத்தில் ஒரு தமிழ்ச் சொற்கு அடி இருப்பதாக ஆசிரியர் சில்லோர் ஆங்காங்கு குறித் திருந்தது உண்மையே; ஆயினும், தமிழ்ச் சொற் றொகுதி முழுவதும் ஒரு சில தலையடிகளில் நின்றே

முளைத்துக் கிளைத்துள்ளது என்னும் உண்மை இதுவரையில் பிறரால் நிலைநாட்டப்படாதது ஆயிற்று. ஆயினமையின், பிற மொழிகளோடு தமிழுக்கு உள்ள ஒப்பியலைத் தெளிவித்தலைப் பற்றிச் சொல்லவும் வேண்டப்படாது அன்றே? ஆகலானே இச்சொற்பிறப்பு ஒப்பியற் தமிழ் அகராதி எழுந்தது' என்கிறார்.

5. திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி

இவ்வகராதி பரோ, எமனோ ஆகியோரால் 1961 1968-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளது.

## (உ) பொருட்களஞ்சிய அகராதி

சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருவதே பொருட் களஞ்சிய அகராதியாகும்.

1. அபிதான கோசம்

முத்துத்தம்பிப் பிள்ளை இவ் அகராதியினை இயற்றியுள்ளார். இந்நூல் 1985-ஆம் ஆண்டு ஏசியன் நிறுவனத் தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் சொற்களும், அதற்கான விளக்கங்களும் தரப் பட்டுள்ளன.

2. கலையும் இலக்கியமும் (Encyclopaedia of Literature)

ஜோசப் சிப்லே இவ் அகராதியினை இயற்றியுள்ளார். இந்நூல் 'Philosophical Library' நிறுவனத்தாரால் பதிப் பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின்கண் உலக மொழிகள் அனைத்திலும் பேசப்படும் இலக்கியம், இலக்கணம், மொழியியல் போன்றவற்றின் செய்திகள் கூறப்படுகின்றன. நம் தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கண, மொழியியல் கருத்துக்கள் இந்தியத் தமிழ் இலக்கியம் (Indian Tamil Literature) என்ற தலைப்பில் கீழ் இடம் பெறுகின்றன.

இவற்றில் தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் மொழி யியல் நூல்கள் பற்றிய குறிப்புக்கள் மிகவும் குறை வாகவே கூறப்பட்டுள்ளன.

கிறித்தவப் புலவர்களைக் கூறும்போது, பெஸ்கி, இரேனியஸ், கால்டுவெல் போன்றோரின் படைப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

பெஸ்கியின் படைப்புக்களாக இந்நூலின்கண் சில வற்றையே காண முடிகிறது. வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், வாமன்கதை, பரமார்த்த குரு கதை, தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் போன்றவையே கூறப்பட்டுள்ளன.

இரேனியஸ் படைப்பாகத் திராவிடமொழி ஒப்பிலக் கணம் என்ற நூல் மட்டும் கூறப்பட்டுள்ளது.

### 3. தமிழ் வேதாகம ஒத்த வாக்கிய அகராதி

கிறித்தவ இலக்கியச் சங்கம் இந்நூலினை 1982-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. இவ்வகராதியின்கண் வேதாகமச் செய்திகள் அகரநிரற்படுத்தப் பட்டுள்ளன. இவ்வகராதியில் 8,400 பொருள்களும் 1,70,000 தொடர் களும் அடங்கியுள்ளன.

### 4. வேதப் பொருட் கண்ணாடி

மில்லர் இந்நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 1971-ஆம் ஆண்டு சென்னை, கிறித்தவ இலக்கியச் சங்கத் தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் வேதாகமச் செய்திகள் 314 பொருள் களில் கூறப்பட்டுள்ளன. இத்தகு பொருள்கள் அரிச்சுவடி வரிசையில் தரப்பட்டுள்ளன. இவற்றில் கையாளப் பட்டுள்ள பொருட் சுருக்கங்கள் அட்டவணையில் தரப் பட்டுள்ளன.

'வேதாகமத்தைக் கொண்டு கவனமாகப் படிக்கும் எவனும் பிறரைச் சத்தியத்திற்கு வழிநடத்திச் செல் வதில் தன்னிலே தானே தேர்ந்தவனும் தகுதியானவை களைப் பெற்றுக் கொண்டவனுமாவான். சந்தேகமின்றி இந்த வெளியீடு முற்றிலும் பரணமானது என்று சொல்ல முடியாவிட்டாலும், முயற்சியுடனிருக்கிற ஊழியனுடைய நூல் நிலையத்திற்கு உபயோகமுள்ள மற்றுமொரு நூலாகும்' எனச் சுட்டப்படுகிறது.

# IV மொழிபெயர்ப்பியல்

ஒரு மொழியில் உள்ளதை வேறொரு மொழியில் பெயர்த்துத் தருவது மொழிபெயர்ப்பாகும். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழியினர் அறியுமாறும், பிற மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியினர் உணருமாறும் இலக்கியங்கள் கிறித்தவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழினின்று பிற மொழிகள், பிற மொழிகளினின்று தமிழ் என இருவகைப் படுத்தலாம்.

பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டவற்றைத் (1) திருக்குறள், (2) காப்பியம், (3) பிறவகை என மூன்றாகப் பகுக்கலாம்.

## (அ) திருக்குறள்

திருக்குறளுக்குத்தான் அதிக மொழிபெயர்ப்புக்கள் தோன்றியுள்ளன. ஆங்கில மொழியில் ஏழு மொழி பெயர்ப்புகளும், இலத்தீன் மொழியில் மூன்றும், சிங்கள மொழியில் இரண்டும், செக்கோஸ்லாவியா மொழியில் ஒன்றும், செருமானிய மொழியில் மூன்றும், டச்சு மொழியில் இரண்டும், பிரெஞ்சு மொழியில் ஐந்தும், பிஜி மொழியில் ஒன்றும், மலாய் மொழியில் ஒன்றும், ஸ்வீடிஷ் மொழியில் ஒன்றுமாக மொத்தம் இருபத்தாறு மொழி பெயர்ப்புகள் தோன்றியுள்ளன.

## ஆங்கிலம்

### 1. எல்லீஸ்

இவ்வாசிரியர் திருக்குறளினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1958-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

வான் சிறப்புப் பற்றிக் கூறும்போது,

'வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று'

என்னும் குறளினை,

*'As by abundant rain the world subsists*
*Life's sole elixir in this fluind know'*

என மொழிபெயர்த்துள்ளார்.

### 2. ஏரியல்

'திருவள்ளுவரின் குறள்' என்னும் தலைப்பில் 1848, 1962-ஆம் ஆண்டுகளில் 'Journal Asiatic' என்னும் இதழில் இவ்வாசிரியரின் மொழிபெயர்ப்புக் காணப் படுகிறது.

### 3. கின்னர் சுலி

இவ்வாசிரியர் ஆங்கில மொழியில் 1794-ஆம் ஆண்டு மொழிபெயர்த்துள்ளார். கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், செய்ந்நன்றி யறிதல், நடுவுநிலைமை ஆகிய 11 அதிகாரங்களின் குறள் கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

4. தங்கையயா

இவ்வாசிரியர் 1955-ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

5. பாப்புலே

இவ்வாசிரியர் 1931—ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

6. பெஞ்சமின் பாபிங்டன் கை

வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கண நூலை இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். அந்நூலில் மேற்கோள்களாக இலக்கியப் பாக்களையும் தருகிறார். இந்நூலை பெஞ்சமின் பாபிங்டன் கை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குங்கால், அதனுள் இடம்பெற்ற திருக்குறட் பாக்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார்.

அந்நூலின்கண் 16 குறட்பாக்கள் (பக். 18, 26, 32, 35, 44, 49, 50, 60, 61, 71, 75, 77, 85, 104, 107, 113) மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று பின்வருவது.

*'குழலினி தியாழினி தென்பர்தம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்'*

என்னும் குறளினை,

*'Those may praise the pipe and the flute,*
*who have never heard the prattle of children*
*of their own'*

என்று மொழி பெயர்க்கிறார்.

7. போப்

முதன்முதலில் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்

தில் மொழி பெயர்த்தவர் இவரே. 1886 ஆம் ஆண்டு ஏசியன் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலைப் பொது முன்னுரை, குறளின் இலக்கணம், குறளின் யாப்பு இலக்கணம் என்னும் மூன்று பகுதிகளாக அமைத்துள்ளார்.

8 மிக்கேல்

இவ்வாசிரியர் ஆங்கில மொழியில் 1944ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

### இலத்தீன்

1 கிரால் சார்லஸ்

இவ்வாசிரியர் இலத்தீன் மொழியில் 1866 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் தரங்கம்பாடி அச்சகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

2. பெஸ்கி

பெஸ்கி இலத்தீனில் திருக்குறளை 1730 ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார். காமத்துப்பாலைத் தவிர்த்து விட்டார். மொழி பெயர்த்தவற்றிற்கு உரையும் எழுதியுள்ளார். அது கையெழுத்துப்படியாகவே உள்ளது. அவற்றினின்று ஐந்து அதிகாரங்கள் மட்டும் வி. மி. ஞானப்பிரகாசம் அடிகளார் முயற்சியால் வெளி வந்துள்ளது. இந்நூல் 1977 ஆம் ஆண்டு பாளையங் கோட்டை பாத்திமா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு உள்ளது.

'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தில்,

'வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று'

என்னும் குறளினை,

*'cum pluvia indeficienter pluens faciat mundum subsistere putandum esteam orbiesse vitale pharacum. (Mundi subsistentia esthominum vita quacsine pluvia servari nequit'*

என்று வீரமாமுனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்ததைக் குறிப்பிட்டுக் காட்டி, 'தவறாது பெய்யும் மழை உலகை வாழ வைப்பதால், அது உலகுக்கு உயிர் தரும் மருந்தெனக் கருதப்படல் வேண்டும். (உலகில் வாழ்வு மனிதனின் வாழ்வாகும். இது மழையின்றிக் காப்பாற்றப்பட இயலாது)' என மீண்டும் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார் அருள்நிறை வி. மி. ஞானப்பிரகாசம் அடிகளார்.

## சிங்களம்

1. சார்லஸ் சில்வா

இவ்வாசிரியர் சிங்கள மொழியில் 1964 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார்.

2. மிசிகாமி

சிங்கள மொழியில் 1961ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

## செக்கோஸ்லெவியா

கமில் சுவலபில்

இவ்வாசிரியர் செக்கோஸ்லேவியா மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

## செருமானியம்

1. காமர்சு

இவ்வாசிரியர் செருமானிய மொழியில் 1803 ஆம் ஆண்டு மொழிபெயர்த்துள்ளார்.

2. கிரால்

செருமானிய மொழியில் 1854 ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

3. பிரெடரிக்

செருமானிய மொழியில் 1847 ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

### டச்சு

1. காட்

இவ்வாசிரியர் டச்சு மொழியில் 1964 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார்.

2. துரு

இவர் டச்சு மொழியில் 1840 ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

### பிரெஞ்சு

1. ஞானோதியாகு

இவ்வாசிரியர் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து உள்ளார். இது, 1942 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி சந்தானம் அச்சகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

2. துமாஸ்

இவர் பிரெஞ்சு மொழியில் 1854, 1857 ஆம் ஆண்டு களில் மொழிபெயர்த்துள்ளார்.

3. பவன்தேனா

பிரெஞ்சு மொழியில் 1889 ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

**4. லெமரைஸ்**

பிரெஞ்சு மொழியில் 1867 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார்.

**5. ஜாக்குலியட் லூயிஸ்**

பிரெஞ்சு மொழியில் 1867 ஆம் ஆண்டு மொழி பெயர்த்துள்ளார்.

### பிஜி

**1. சாமுவேல் பெர்லிக்**

இவர் பிஜி மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்துள்ளார். இந்நூலினை பிஜி இராமகிருஷ்ணா மிஷன் வெளியிட்டுள்ளது.

### மலாய்

**தூசை**

இவர் மலாய் மொழியில் 1978 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார்

### ஸ்வீடிஷ்

**யூங்வ் ப்ரைகோல்ம்**

ஸ்வீடிஷ் மொழியில் 1971 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார்.

## (ஆ) காப்பியங்கள்

கிறித்தவர் செய்த காப்பியங்களின் மொழிபெயர்ப்பு களை இருவகைப்படுத்தலாம். அவை (1) பிறமொழிக் காப்பியங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு (2) பிற மொழிகளில் தமிழ்க் காப்பியங்களின் மொழி பெயர்ப்பு என்பனவாம்.

## I தமிழ் மொழி பெயர்ப்புகள்

### 1. அலெக்ஸாண்டர் போப்

இவ்வாசிரியர் ஹோமர் இயற்றிய இலியட் (Illyad) என்ற காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இக்காப்பியம் ஆங்கில மொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந் நூல் 1964ஆம் ஆண்டு 'Madras Government Oriental Series' நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய புகழ்பெற்ற இலியட் என்னும் காப்பியத்தை அலெக்ஸாண்டர் போப் என்னும் ஆங்கில மகாகவி மொழி பெயர்த்துக் காப்பியம் இயற்று முன்னால் பலர் மொழி பெயர்த்திருந்தனர். இவருக்குப் பின்னும் சிலர் செய்ததுண்டு. ஆனால் போப் இயற்றிய காப்பியமே எல்லோராலும் போற்றப்படுகின்றது.

ஹோமர் என்னும் கிரேக்க மகாகவி மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கிரேக்கர்களுக்கும், துரோஜர் கட்கும் நடைபெற்ற போரை ஆதாரமாக வைத்து இலியட் என்னும் காப்பியத்தை இயற்றினார். அந்தப் போர் நடைபெற்ற ஒன்றே; ஆனால் ஹோமருடைய காப்பியம், நடந்த நிகழ்ச்சிகள் எவை, அவருடைய கற்பனைகள் எவை என்று பிரித்தறிய முடியாத விதத்தில் ஒன்றாய் இணைந்து அழகான ஒரு சித்திரத்தை தீட்டுகின்றது.

### 2. கிருஷ்ண பிள்ளை

இவ்வாசிரியர் ஜான் பனியன் எழுதிய 'Pilgrim's Progress' என்ற உரைநடை நூலினைத் தழுவி இரட்சணியயாத்திரிகம் என்ற காப்பியத்தை இயற்றி யுள்ளார்.

3. பவுல் ஐயர்

இவ்வாசிரியர் ஜான் பனியன் எழுதிய திருப் பயணியின் முன்னேற்றம் (Pilgrim's Progress) என்ற நூலை 'மோட்சப் பிரயாணம்' என்னும் பெயரில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1982ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் இருபாகங்களாக எழுதப்பட்டுள்ளது. முதல் பாகத்தில் 38 தலைப்புகளிலும், இரண்டாம் பாகத்தில் 34 தலைப்புகளிலும் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

4. வேதக்கண்

ஆங்கிலக் கவிஞன் மில்டன் இயற்றிய 'தேவுலக இழப்பு' என்னும் நூலினைத் தழுவிக் கீர்த்தனை நாடகம் எழுதியுள்ளார். 'நந்தவனப் பிரளயம்' என்னும் இந்நூல் 1867ஆம் ஆண்டு நாகர்கோவில் விக்டோரியா அச்சி யந்திர சாலையில் பதிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின்கண் பிதா வணக்கம், குமாரன் வணக்கம், ஸ்பிரித்து வணக்கம், வேதியர் வணக்கம், அவையடக்கம், நூற்பெயர் ஆகியன கூறப்பட்டு நூற் கதை தொடங்கப்படுகிறது. இந்நூல் ஆறு சருக்கங் களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் வாழ்த்துப்பாடல் இடம் பெறுகிறது.

இவ்வாசிரியர் படைத்த, ஜான் மில்டன் என்பார் எழுதிய 'தேவுலகை மீண்டும் கைக்கொள்ளல்' என்ற நாடகத்தின் மொழி பெயர்ப்பே 'ஆதி நந்தவன மீட்சி' யாகும். இந்நூல் 1868 ஆம் ஆண்டு நாகர்கோவில் கிறிஸ்டியன் நாலெட்ஜ் சொசைட்டியினரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

## II ஆங்கில மொழிபெயர்ப்புகள்

### 1. டேவிட்

இவ்வாசிரியர் சீவக சிந்தாமணியினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1980 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் ஜோசப் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

### 2. பெஞ்சமின் பாபிங்டன் கை

**சீவகசிந்தாமணி**

வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதியுள்ள செந்தமிழ் இலக்கணத்தில் தமிழ்க் காப்பியங்களிலிருந்து சில மேற் கோள் பாடல்களைத் தருகிறார். அந்நூலை ஆங்கிலத் தில் மொழிபெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற சீவகசிந்தாமணிப் பாடல்களையும் மொழிபெயர்த்து உள்ளார். அவற்றுள் ஒன்று பின்வருவதாகும்.

'செல்வர் மனத்திலோங்கித் திருவின்மாந்தர் நெஞ்சின்
எல்லை யிருளிற்றாகிப் பூந்தாதினிதி னொழுகிக்
கொல்லு மரவின்மயங்கிச் சிறியார்கொண்ட தொடர்பிற்
செல்லச் செல்லவஃகு நெறிசேர் சிலம்பு சேர்ந்தான்'.

இப்பாடலை ஆங்கிலத்தில்,

*He approached the mountain by a road soaring*
*as the mind of the wealthy, dark at midday as the heart*
*of the indigent, level as the petals of a flower,*
*winding like*
*a deadly serpent, lessening in progrees as the*
*friendship of the mean,*

என்று மொழிபெயர்க்கிறார்.

**தேம்பாவணி**

பெஞ்சமின் பாபிங்டன் கை வீரமாமுனிவருடைய

செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற தேம்பாவணிப் பாடல்களை ஆறு இடங்களில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றுள் ஒன்று பின்வருவதாகும்.

*'நாக — நெற்றியி — னன்மணி — யோடைபோ*
*னாக — நெற்றியி — னன்யணி — யாறுபாய்*
*நாக — நெற்றியி — னன்மலர்க் — காவப் பா*
*னாக — நெற்றியி — னன்மதி — தோன்றிற் றே'*

என்னும் பாடலினை,

*'The grove of Nagas, watered by the stream which flows hearing gems from the mountain top, like the jewet spangled frontlet that hangs on the forehead of the elephant : and now the waring moon appeared on the verge of the heavens'*

என்று மொழிபெயர்க்கிறார்.

சிலப்பதிகாரம்

பெஞ்சமின் பாபிங்டன் கை வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதிய செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற சிலப்பதிகாரப் பாடல் ஒன்றனைச் செந்தமிழ் இலக்கண நூலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்

*பாம்பு — கயிறாக — கடல்கடைந்த — மாமாயன்*
*ஈங்குநம் — மானுள் வருமே — லவன்வாயின்*
*ஆம்பலந் தீங்குழல் — கேளா — மோதோ ழீ*
*கொல்லையஞ் — சாரற் — குருந்தொசித்த — மாமாயன்*
*எல்லிநம் — மானுள் — வருமே — லவன்வாயின்*

முல்லையந் — தீங்குழல் — கேளா — மோதோ ழீ
கன்று — குணிலாக — கனியுகுந்த — மாமாய ன்
இன்றுநம் — மானுள் — வருமே — லவன்வாயி ற்
கொன்றையந் — தீங்குழல் — கேளா — மோதோ ழீ
(ப. 117)

என்னும் அப்பாடலை,

'If the mighty Mayen (Vishnu) who churned the ocean, using the snake as his churning rope, should come hither amidst our herds, shall we not hear the sweet ambel pipe sounded by his mouth, O my friend ?

If the mighty Mayen who fore down the (false) cerunder tree in the field near our garden, should come among our heids, while the sun is up, shail we not hear the sweet mullei pipe sounded by his mouth, O my friend?

என்று மொழி பெயர்த்துள்ளார்.

கம்ப இராமாயணம்

பெஞ்சமின்பாபிங்டன்கை செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற கம்ப இராமாயணப் பாடல்களை ஆறு (பக்; 74, 76, 83, 90, 102, 136,) இடங்களில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றுள் ஒன்று பின்வருவ் தாகும்.

'தூ தன்னவனைச் சுளியன் மினெனா
வேதம் முதன்ாதன் விலக்கினால்'

என்னும் பாடலை,

*'The first Lord of the Vedas checked them,*
*saying be not you angry against him who is a messenger.'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

3. போப்

இவ்வாசிரியர் மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் 1987 ஆம் ஆண்டு பயனியர் புக் சர்வீசஸ் நிறுவனத்தாரால் மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் 30 தலைப்புக்களில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

## (இ) பிறவகை

பிறவகை என்ற பிரிவின் கீழ், சங்க இலக்கிய மொழி பெயர்ப்பு, நீதி நூல்கள் மொழிபெயர்ப்பு, பக்தி இலக்கிய மொழி பெயர்ப்பு, சிற்றிலக்கிய மொழி பெயர்ப்பு, விவிலிய மொழிபெயர்ப்புப் போன்றவை இடம் பெறுகின்றன.

### சங்க இலக்கியங்கள்

1. கமில் சுவலபில்

இவ்வாசிரியர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், திருக்குறள், கந்தபுராணம் போன்ற நூல்களிலிருந்து சில பகுதிகளை மொழி பெயர்த்து உள்ளார்.

> 'குக்கூ வென்றது தோழி யதனெதிர்
> துட்கென் றன்றென் றூ ய நெஞ்சம்
> தோடோய் காதலர்ப் பிரிக்கும்
> வாள் போல் வைகறை வந்தன் றா லெனரே'

என்னும் குறுந்தொகைப் பாடலை,

> *'Co Cooo*
> *crowed the cock*
> *and my poor heart missed a beat*
> *that the sword of morning come down*
> *to cut me off from my lover twined in my arms'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

2. செல்லையா

இவ்வாசிரியர் பத்துப்பாட்டினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார். இந்நூல் 1962 ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

*'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்*
*திசைதிரிந்து தெற்கேகிலும்*
*தற்பாடிய தளியுணவிற்*
*புட்டேம்பப் புயன்மாறி*
*வான் பொய்ப்பினும்தான் பொய்யா''*

என்னும் பட்டினப் பாலைப் பாடலை,

*'Though Venus star of splendour bright*
*strays southward from its wonted - course*
*Cool showers fall to fall, and the lark*
*That feeds on rain silence droops*
*Yet sea like Kaveri mountain fed'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

3 பெஞ்சமின் பாபிங்டன் கை

கலித்தொகை

பெஞ்சமின் பாபிங்டன் கை செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற கலித்தொகைப் பாடல் ஒன்றனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

*'வைகலும் வைகல் வரக் கண்டும்ஃதுணர்*
*வைகலும் வைகலை வைகுமென் றின் புறுவர்*
*வைகலும் வைகற்றம் வாணாள்மேல் வைகுதல்*
*வைகலை வைத்துணரா தார்'*

(ப. 21)

என்னும் அப்பாடலினை,

'Alhough they daily see the morning break, yet they understand it not, and daily rejoice in the thought that the present day is the past one: they do not daily consider the past day to be one day added to that portion of their life wich has expired'

என்று மொழிபெயர்த்துள்ளார்.

4. போப்

இவ்வாசிரியர் 'தமிழ் வீரயுகப் பாடல்' என்னும் தலைப்பின்கீழ் புறநானூறுற்றுப்பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1973ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பெருஞ்சித்திரனார் பாடிய,

'ஈர்ந்தண் சிலம்பினி ருடுங்கு நனி முனடி
அருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப்
பெருங்கனாடன் பேகன்'

என்னும் பாடலை,

*'Pegan Lord of the mountain land*
*On whose cool heights are cavernsdeep*
*Where darkness rules, and pedles defended*
*by the God'*

என்று மொழிபெயர்த்துள்ளார்.

5. லூடன்

இவ்வாசிரியர் குறுந்தொகைப் பாடல்களையும் அவற்றுக்கான உரையினையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1976 ஆம் ஆண்டு மதுரை கூடல் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

*'நிலத்தினும் பெரிதே வானினுமுயர்ந்தன்று*
*நீரினுமாரளவின்றே சாரற்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேனிழைக்கு நாடனொடு நட்பே'*

என்னும் குறுந்தொகைப் பாடலை,

**What she said** என்னும் தலைப்பில்,

*'Wider than the earth*
*And hrgher than the sky*
*and deeper than the Vast Ocean*
*is my love for this man of the hills,*
*Where bees make honey*
*from the black sta!ked Kurinci flower '*

என்று மொழிபெயர்த்துள்ளார். இப்பாடலுக்கான உரை பின்வருமாறு அமைந்துள்ளது.

' The Kurinci flower is the flower of the Mountain Region. It blooms every twelve years. As the bees will make honey from the Kurinci and no other when it blooms, so he will come to her and no other women. Here she re-affirms again her faith in him.

6. ஹெர்மன் டிக்கன்

இவ்வாசிரியர் சங்கப் பாடல்களைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1979ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

## நீதி நூல்கள்

### நாலடியார்

1. பெஞ்சமின் பாபிங்டன் கை

பெஞ்சமின் பாபிங்டன் கை வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதிய செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அதனுள் இடம்பெற்ற

'இன்று கொ-லன்று கொ-லென்று கொ-லென்னாது
பின்றையே-நின்றது-கூற்றமென்-றெண்ணி
யொருவுமின்-றீயவை-யொல்லும்-வகையான்
மருவுமின்-மாண்டா-ரறம்' (ப. 109)

என்னும் பாடலினை,

'Say not to-day, or that day, or any day; but reflect that death is ever standing behind you Eschew evil, and with unceasiug endeavours adhere to virtue, ordained by sages' என்று மொழிபெயர்த்து உள்ளார்.

## நான்மணிக்கடிகை

பெஞ்சமின் பாபிங்டன்கை செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற நான்மணிக்கடிகைப் பாடல் ஒன்றனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். சான்றாக,

'மழையின்றி-மாநிலத்தார்க்-கில்லை-மழையுந்
தவமுளா-ரில்வழி-யில்லைத்-தவமு
மரசுளா-லில்வழி-யில்லை-யரசனு
மில் வாழ்வா-லில்வழி-யில்' (ப. 110)

என்னும் பாடலினை,

'If rain fail, the inhabitants on the earth suffer; where no penitents are found, the rain falls not; penitence is not performed where there is no king; and kings reign not where civil society does not exist' என்று மொழி பெயர்த்துள்ளார்.

## 3. போப்

இவ்வாசிரியர் நாலடியார் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1984 ஆம் ஆண்டு ஏசியன் நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

**4. இராபின்சன்**

இவ்வாசிரியர் 'Tamil Wisdom' என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்நூல் 1957 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளது.

இந்நூலில் திருக்குறள், மூதுரை, ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், கபிலர் அகவல் போன்றவற்றை மொழிபெயர்த்துள்ளார். அவற்றுள் சில பின்வருவன

கடவுள் வாழ்த்தினைக் கூறும்போது அதற்கு,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்னும் குறளினை,

*'Eternal God all things precedes*
*As Alpha all the letters leads'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

' நல்லதைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்களுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கியிருப் பதுவும் நன்று '

என்னும் மூதுரைப் பாடலை,

*'Happy the eyes that on the pious rest*
*The ears that hear their useful words are bless'd*
*And bless'd the lips that all their virtues tell;*
*More happy they, their character who wear,*
*Their friendship gain, their reputation share*
*Their sacred paths frequent and with them dwell'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

' அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல் '

என்னும் ஆத்திச்சூடிப் பாடலை,

*'The chance of doing good desire*
*Exting wish anger's kindling fire*
*The means at your commund confess*
*Be no one hinder'd who would bless'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

*' பெற்றோர்க்கில்லை சுற்றமுஞ் சினமும்*
*பேதமையென்பது மாதர்க்கணி கலம்*
*பையச் சென்றால் வையந் தாங்கும்*
*பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர் '*

என்னும் கொன்றை வேந்தன் பாடலை,

*'Who gain the highest stnte, nor hate nor love*
*Simplicity is woman's Jewel bright*
*The earth bears longest those who gently move*
*All kinds of evil banish out of sight'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

*' சாற்றளவும் போகான் தமரொடும் போகான்*
*நல்லாரென்னாள் நல்குரு வறியான்*
*தீயாரென்னான், செல்வரென்றுண்ணான் '*

என்னும் கபிலர் அகவல் பாடற்பகுதியை,

*'You may argue, but you' ill be denied;*
*With your kin he'll not be satisfied*
*All alike in death most share;*
*He will neither from the good in turn,*
*Nor the needy, nor the wicked sparn*
*Nor the man of money spare'*

என்று மொழி பெயர்த்துள்ளார்.

## பக்தி இலக்கியங்கள்

**1. ஆல்பிரட்**

இவ்வாசிரியர் திருவாசகத்தினைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1977ஆம் ஆண்டு காரைக்குடி தென்னிந்திய அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

**2. போப்**

இவ்வாசிரியர் திருவாசகத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் 1979ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

*'கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை*
*வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்*
*கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன் கருணை'*

என்னும் பகுதி,

*'The Mighty one, the southking, perun—turrai's Lord*
*Me vilest car, of mind untought, with frenzy filled;*
*Kneaded the stone, made it sweet fruit; plunged in the food.*

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## பிற பாடல்கள்

**போப்**

இவ்வாசிரியர் தனிப் பாசுரத் தொகைப் பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் சென்னை பி.என். நிறுவனத்தாரால் பதிப்பிக்கப்பட்டு உள்ளது.

கல்வியைபற்றிக் கூறும்போது அதற்கு,

*கல்வியே மக்கடங்கண்ணே! புலவர் தஞ்*
*செல்வியே மனத்தின் செல்விய வுளவே*

*நின்னொடு பயிற மன்னிய மாந்தர்*
*தமக்கும் பிறர்க்குந் தனிப்பேரின்பம்*
*கும்பயிறற் குக்கை கூலி போலத்*
*தரும்பொருளே உயர்நகை முத்தி வித்தே*

*பரந்த பாரினும் விரிந்த வானினும்*
*பாவலர் நூலினும் பரிவுடன் மேவி*
*ஆவலில் விளையாட் டயர்தரு மங்காய்*
*கருத்தினிற் களிப்பை உரைப்பை யாற்றுரை*

*கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்*
*கெதுவு நன்னாடே எதுவு நல்லூரே*
*ஆகவு மென் கொல நேகர்*
*ஊகமின்றி நாகுலம்ப விட்டனரே*

என்னும் பாடல்,

*'Learning Thou eye of men the sages find*
*Delight in thee, —the fitting food of mind*
*Lerners and teachers for their pleasant toils*

*Get over payment in thy ample spoils*
*From all the ages won, —wisdom of all mankind*
*Through ear has wide realms beyond the starry skie*

*Thou dost explore with eager sporting Joy*
*All lays of bards whose glory never dies*
*Whereever thought may dwell thou findest glad employ*
*And thou can't speak of rest from earths annoy*

*Who hold thee fort, their home is everywhere;*
*These freedom of earth's every city share.*
*Why do men fail thy preffer'd boon to gain*
*And darkling live their precious lives in vain'*

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## வெண்பா

**பெஞ்சமின் பாபிங்டன்கை**

*பெஞ்சமின் பாபிங்டன்கை வீரமாமுனிவர் இலத்தீனில் எழுதிய இலக்கண நூலில் நான்கு வெண் பாக்களை (பக். 48, 50, 108, 109) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அவற்றுள் ஒன்று,*

*சீரெல்லா முள்ளுடையை தீதெல்லாநீத் தொளியை*
*நேரெல்லாம் வெல்வலியை நேமாக்கினியை நீ*
*யாரெல்லாமென் பரடிக ளிது மெய்யேற்*
*பாரெல்லா முன்னைப் பணியாதவாறென்னே'*

*என்னும் பாடலாகும். இதனை ஆங்கிலத்தில்,*

'O Lord; Thou hast all good within Thee : Thou, who art exempt from all evil, appearest with splendour. Thou art Omnipotent and without equal ! Thou rejoicest the world; Who can declare all Thy perfections? If thus it be, then, wherefore does all the world neglect to worship Thee?'

*என்ற பெஞ்சமின் பாபிங்டன்கை மொழி பெயர்க்கிறார்*

## நைடதம்

**பெஞ்சமின் பாபிங்டன்கை**

*பெஞ்சமின் பாபிங்டன்கை நைடதப் பாடல் ஒன்றனைச் செந்தமிழ் இலக்கண நூலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.*

*' உரவுநீர்க் கருங் கடலுடுத்த மாநிலத்*
*தருளுடனிம் மையிலளித்த வான்பொருள்*
*மருவிய மறுமையில் வழங்கு பான்மையா*
*விரவலர்த மரினுமினியராவ ரே '* (ப. 58)

என்னும் அப்பாடலினை ஆங்கிலத்தில்,

'Since the well earned riches which we bountifully distribute in this world girt with the blue ocean, have the power of acquiring for us rewared in the life on which shall hereafter enter, the poor should be dearer to us than our own relations. Here relations is expressed by தமர்'
என்று மொழி பெயர்த்துள்ளார்.

## பாரதம்

பெஞ்சமின் பாபிங்டன்கை செந்தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குங்கால் அதனுள் இடம்பெற்ற பாரதப் பாடல் ஒன்றினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

'ஆதவனே முனியேலெனை யாளுடையானவனே முனியேல்
ஈதவனே முனியேலி தயத்திலிருப்பவனே முனியேல்
மாதவனே முனியேல் மதவெங் கனலானவனே முனியேல்
நீதவனே முனியேல் முனியேலென நின்று பணிந்தனரே'
(ப. 75)

என்னும் பாடலினை,

'O thou, who art the sun, be not angry; Thou who hast me for thy servant, be not angry; Thou whose penance is rewarded, be not angry; Thou who dwellest in my heart, be not angry. O thou husband of Latchimi, be not angry; Thou righteous one, be not angry: be not angry: So saying, they stood and worshipped him'.

என்று மொழிபெயர்த்துள்ளார்.

## விவிலிய மொழிபெயர்ப்பு

**அடோல்ஸ் கிறாமர்**

இவர் 1741 ஆம் ஆண்டு மத்தேயு நற்செய்தி முழுவதையும் திருத்தி வெளியிட்டுள்ளார்.

**ஆறுமுக நாவலர்**

இவரது 1860ஆம் ஆண்டு யாழ்ப்பாண மொழி பெயர்ப்பு பல எதிர்ப்புகளுக்கிடையில் வெளிவந்தது.

**இராஜரீகம், தே.**

இவரது விவிலிய மொழி பெயர்பு 1974ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

**இரேனியுஸ்**

இவ்வாசிரியர் புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டில் தானியேல் வரையிலும் மொழிபெயர்த்து உள்ளார்.

**சீகன்பால்கு**

இவ்வாசிரியர் விவிலிய (Bible) த்தை கி.பி. 1708 ஆம் ஆண்டு மொழிபெயர்க்கத் தொடங்கி 1714, 1719 ஆண்டுகளில் வெளியிட்டார். இவர் மொழிபெயர்ப்பில் பரதவர் வழக்குச் சொற்களும் கொச்சைச் சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன.

**ஞானப்பிரகாசர்**

இவர் லார்சனுக்கு முன்பே புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்துள்ளார்.

**பல்தேயுஸ்**

இவ்வாசிரியர் காலத்தில் அச்சகம் இல்லாத காரணத்தால் இவரது மொழிபெயர்ப்பு நூலாக வெளி வரவில்லை. பிற்காலத்தில் பலரால் திருத்தப்பட்டு

1744 இல் கொழும்பில் வெளிவந்தது. இவ்வாசிரியர் விவிலியம் (Bible) முழுவதையும் மொழிபெயக்க வில்லை. மத்தேயு நற்செய்தியை மட்டுமே மொழி பெயர்த்து உள்ளார். இவ்வாசிரியர் விவிலியம் (Bible) மட்டுமல்லாமல் கர்த்தர் செபம், பத்துக் கற்பனைகள், விசுவாசப் பிரமாணம் முதலியவற்றையும் மொழி பெயர்த்துள்ளார்.

1. பவர் ஐயர்

பவரின் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு 18 4 1867-ம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளது.

பிலிப் – டிமெல்லோ

இவர் கி.பி. 1750 ஆம் ஆண்டு புதிய ஏற்பாடு முழுவதையும் மொழிபெயர்த்துள்ளார்.

பிலிப்புஸ் வெற் செலியஸ்

இவர் 1742 ஆம் ஆண்டு விவிலியத்தை (Bible) மொழிபெயர்த்துள்ளார்.

பஞ்சமின் சூல்ச்

இவர் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பை கி.பி. 1723 - 1727 ஆம் ஆண்டுகளில் செய்து முடித்தார். 1723 ஆம் ஆண்டு ஆதியாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையிலும், 1724 ஆம் ஆண்டு சங்கீதத்தையும், 1726 ஆம் ஆண்டு ரூத் முதல் உன்னதப் பாட்டு வரையிலும் பிற பகுதிகளை 1727 லும் மொழிபெயர்த்து உள்ளார்.

**பெப்ரீசியஸ்**

இவர் பழைய ஏற்பாட்டை மொழிபெயர்த்து உள்ளார். 1727 ஆம் ஆண்டு ஆதியாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையிலும், 1782 ஆம் ஆண்டு ரூத் முதல் யோபு வரையிலும், 1791 இல் சங்கீதம் முதல் உன்னதப் பாட்டு வரையிலும் மொழிபெயர்த்துள்ளார்.

**மோனகன்**

1942 ஆம் ஆண்டு புதிய ஏற்பாடும், 1945 ஆம் ஆண்டு பழைய ஏற்பாடும் மொழிபெயர்க்கப்பட்டன. 1949 ஆம் ஆண்டு பழைய புதிய ஏற்பாடு அடங்கிய ஒரு முழு விவிலிய நூலாக வெளிவந்தது.

**லார்சன்**

1928 ஆம் ஆண்டு இவரது பழைய, புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

# நூற்பெயர் அகரநிரல்


| | பக்கம் |
|---|---|
| அகராதி பேர் சுவடி | 35 |
| அபிதான கோசம் | 46 |
| ஆங்கிலம்-தமிழ் அகராதி | 37, 38 |
| ஆங்கிலம்-தமிழ்-தெலுங்கு-இந்தி-சொன்மாலை | 42 |
| ஆத்தி சூடி | 66 |
| இடையும் உரியும் | 9 |
| இரட்சணிய யாத்திரிகம் | 56 |
| இலக்கண ஆய்வு பெயர்ச்சொல் | 9 |
| இலக்கண ஆய்வு வினைச்சொல் | 3 |
| இலக்கணச் சிந்தனைகள் | 10 |
| இலக்கணத் திறவுகோல் | 2, 3 |
| இலத்தீன் பிரெஞ்சு தமிழ் அகராதி | 42, 43 |
| இலியதம் | 56 |
| உயர்தரக் கட்டுரை இலக்கணம் | 10 |
| உலக முதன்மைச் செம்மொழி | 28 |
| எட்டுத்தொகை | 61 |
| எழுத்தியல் | 29 |
| கந்தபுராணம் | 61 |
| கபிலர் அகவல் | 66 |
| கம்ப இராமாயணம் | 60 |
| கலித்தொகை | 62 |
| கலையும் இலக்கியமும் | 46, 47 |
| குறுந்தொகை | 63, 64 |
| கொடுந்தமிழ் இலக்கணம் | 3, 4 |
| கொன்றை வேந்தன் | 66 |
| சதுரகராதி | 36 |
| சிங்கள மொழியில் திராவிட மூலம் | 30 |
| சில இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் | 11 |
| சிலப்பதிகாரம் | 59, 60 |

இலோன் தமிழ் அகராதி 36

சீவகசிந்தாமணி 58, 59

செந்தமிழ் இலக்கணம் 4, 5

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி 44,45

சொல்லியல் 30

சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் 11, 12

சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி 4 , 46

டிக்ஷனேரியம் தமுலிகம் 36

தமிழ் அகராதி 37

தமிழ் ஆங்கிலம் அகராதி 38, 39

தமிழ் இடைச்சொற்கள் 12

தமிழ் இலக்கணம் 12-14

தமிழ் இலக்கணச் சுருக்க வினாவிடை 23, 25

தமிழ் இலக்கணத் தெளிவு 15

தமிழ் உரைநடை அகராதி 37

தமிழ் ஒப்பியல் அகராதி 37

தமிழ் சிங்களம் அகராதி 39

தமிழ் பிரஞ்சகராதி 40

தமிழ்-போர்த்கீஸ் அகராதி 40

தமிழ்மொழி 31

தமிழ் மொழிக் கையேடு 41, 42

தமிழ்மொழி வரலாறு 31

தமிழ்-லத்தீன் அகராதி 39, 40

தமிழ் வேதாகம ஒத்தவாக்கிய அகராதி 42

தமிழிலக்கணமும் உரையமைப்பும் 15, 16

திராவிடக் கல்வி 32

திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி 46

திராவிட மொழிகளின் இலக்கண மூலம் 32, 33

திராவிட மொழிகளின் ஒப்பாய்வு 33

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் 33, 34

திருக்குறள் 49-55

திருவாசகம் 86
தேம்பாவணி 58, 59
தொல்காப்பியம் 24, 25
தொல்காப்பிய உருபனியல் 16, 17
தொல்காப்பியம் சொல்லதிகாரம்
உரைக்கோவை 17
தொல்காப்பிய யாப்பு உறுப்பு உரை 18
தொன்னூல் விளக்கம் 5—7
நந்தவனப் பிரளயம் 57
நன்னூல் 25, 26
நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை
எழுத்ததிகாரம் 18
நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை
சொல்லதிகாரம் 19
நன்னூல் மூலமும் அகப்பொருள் மூலமும்
புறப்பொருட் இலக்கியத்தோடு வெண்பா
மாலை மூலமும் 19
நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான்
உரையும் 19, 21
நான்மணிக்கடிகை 65
நாலடியார் 64, 65
நைடதம் 70, 71
பத்துப்பாட்டு 61
பாரதப்பாடல் 71
பிரன்சு தமிழ் அகராதி 42
புறநானூறு 63
புறப்பொருள் வெண்பாமாலை 26, 27
பொதுத்தமிழ் இலக்கணம் 21
போர்த்துகீஸ்—லத்தீன்—தமிழ்அகராதி 43
மணிமேகலை 61
மூதுரைப் பாடல் 66
மொழி அகராதி 43
மோட்ச பிரயாணம் 57
விவிலியம் 72—74
வெண்பாக்கள் 70
வேதப்பொருட் கண்ணாடி 47, 48
வேர்ச்சொல் அகராதி 44
வேர்ச்சொற் கட்டுரைகள் 21, 22

## ஆசிரியர் பெயர் அகரநிரல்


| | |
|---|---|
| அண்டிறீக் அடிகளார் | 1 |
| அந்தோணி | 42 |
| அந்தோணி டி பிரோயன்சா | 40 |
| அலெக்ஸாண்டர் போப் | 56 |
| ஆபிரகாம் அருளப்பன் | 11, 17, 18 |
| ஆர்டன் | 21 |
| ஆரோக்கியசாமி | 42 |
| ஆரோக்கியநாதன், எஸ். | 12 |
| ஆல்பர்ட், டீ. | 24, 25, 68 |
| ஆறுமுக நாவலர் | 72 |
| இசரயேல், மோ. | 8, 9, 16, 17 |
| இராபர்ட் அந்தர்சன் | 12-14 |
| இராபின்சன் | 66 |
| இராஜரீகம், தே. | 72 |
| இன்னாசி, சூ. | 10, 29, 30, 36 |
| ஊச் டர்லனி | 37 |
| எமனோ | 45 |
| எல்லீஸ் | 50 |
| ஏரியல் | 37, 50 |
| கமில் சுவலபில் | 53, 61 |
| காட் | 34 |
| காமர்சு | 53 |
| கால்டுவெல் | 33, 34 |
| கிரால் | 51 |
| கிரால் சார்லஸ் | 52 |
| கிருஷ்ணப் பிள்ளை | 56 |
| கின்னர் சுலி | 50 |
| குரி, ஆர். பி. | 40 |
| கூழங்கைத் தம்பிரான் | 19-21 |
| சாமுவேல் பிள்ளை | 22, 23 |
| சாமுவேல் பெர்லிக் | 55 |

சார்லஸ் சில்வா 53

சீகன்பால்கு 14, 35, 36, 37

சூசை 55

செல்லையா 62

ஞானப்பிரகாசர். எஸ். 30, 45

ஞானோதியாகு 54

டேவிட், எச். எஸ். 37

தங்கையா 51

தாவீது யோசேப்பு 15

துபே 40, 42

துமாஸ் 54

துரு 54

தேவநேயன், ஞா. 10, 11, 12, 21, 22, 28, 29 44

நைட் 37

பரோ 45

பல்தேயூஸ் 72

பவர் ஐயர் 26

பவுல் ஐயர் 57

பாப்புலே 51

பிரதர்டன் 38

பிரெடரிக் 54

பிலிப்-டி-மெல்லோ 73

பிலிப்புஸ் வெற்செலியஸ் 73

புருனோ 36

பெஞ்சமின் சூல்ஸ் 73

பெஞ்சமின் பாபிங்டன்கை 51, 58, 59, 60

பெர்சிவல் 38

பெர்ன்வெல் 38

பெரிஸ், என். டி. 39

| | |
|---|---|
| பொன்னையா, வ. | 15, 16 |
| போப் | 23, 24, 25, 26, 27, 31 |
| | 39, 42, 51, 52, 61 |
| மரிய அந்தோணி | 14 |
| மார்க் காலின்ஸ் | 32 |
| **மிக்கேல்** | **52** |
| மிசிகாமி | 53 |
| மில்லர் | 47, 45 |
| முத்துச்சாமிப்பிள்ளை, அ. | 45 |
| முத்துத்தம்பிப் பிள்ளை | 19 |
| மூசே | 40, 42 |
| மோசசு பொன்னையா | 18, 19, 31 |
| மோனகன் | 78 |
| யூஸ்ல் ப்ரைபேகார்ம் | 53 |
| ராட்லர் | 37 |
| லார்சன் | 74 |
| லெமரைஸ் | 55 |
| வில்லியம் நெலின்சு | 38 |
| வின்சுலோ | 39 |
| வீரமாமுனிவர் (பெஸ்கி) 2, 7, 36, 40, 42,—52, 53 | |
| வேதக்கண் | 58 |
| ஜாக்குலியட் லூரயிஸ் | 55 |
| ஜான் லாசரஸ் | 14, 15, 25 |
| ஜூல்ஸ் பிளாக் | 32, 33 |
| ஜோசப் சிப்லே | 45 |
| ஜோவான் பிலிப் பப்ரீஷியஸ் | 39 |
| ஹட்சிஸ்சு | 37 |
| ஹார்ட்மேன் | 43 |
| ஹெர்மன் டிக்கன் | 64 |
| ஹோப்ரோ | 38 |
| ஸ்பால்டிஸ் | 37 |
| ஸ்பெர்ஸ்நெய்டர் | 38 |

## III. பிறமொழி — தமிழ் மொழி இணைச்சொற் பட்டியல்

| | | |
|---|---|---|
| Albert, D. | — | ஆல்பர்ட் டீ. |
| Alexander Pope | — | அலெக்சாண்டர் போப் |
| Antony de Proenca | — | அந்தோணி டி பிரோயன்சா |
| Applied Science Publishers Ltd., London | — | இலண்டன் அறிவியல் வெளியீட்டு நிறுவனத்தார் |
| Arden | — | ஆர்டன் |
| Ariel | — | ஏரியல் |
| Autograph | — | மூலக்கையேடு |
| Baldaus | — | பல்தேஸ் |
| Benjamin Babington Guy | — | பெஞ்சமின் பாபிங்டன் கை |
| Benjamin Schultze | — | பெஞ்சமின் சூல்ஸ் |
| Beschi | — | பெஸ்கி |
| Bower | — | பவர் |
| Bratherton | — | பிரதர்டன் |
| British Library | — | பிரிட்டிஷ் நூலகம் |
| Bruno | — | புருனோ |
| Burrow | — | பரோ |
| Caldwell | — | கால்டுவெல் |
| Charles Silva | — | சார்லஸ் சில்வா |
| Clavis | — | திறவுகோல் |
| Commerce | — | காமர்சு |
| David Joseph | — | தாவீது ஜோசப்பு |
| Drew | — | துரு |
| Dumas | — | துமாஸ் |
| Dupuis | — | துபே |

| | | |
|---|---|---|
| Ellis | — | எல்லீஸ் |
| Emenau | — | எமனோ |
| Folio | — | ஏடு |
| Frederick | — | பிரெடரிக் |
| Graul | — | கிரால் |
| Graul Charles | — | கிரால் சார்லஸ் |
| Guri, R. B. | — | குரி, ஆர். பி. |
| Handlist | — | கையெழுத்துப் பட்டியல் |
| Henry Henriques | — | அண்டிறீக் அடிகளார் |
| Herman Dicken | — | ஹெர்மன் டிக்கன் |
| Humaniorum | — | கல்வி-கலை |
| Idiomatics | — | மொழி |
| Indian Tamil Literature | — | இந்தியத்தமிழ்இலக்கியம் |
| Israel, M. | — | இசரயேல், மோ. |
| John Lazarus | — | ஜான் லாசரஸ் |
| John Phillip Fabricius | — | ஜோவான் பிலிப் பெப்ரிசியஸ் |
| Joshi | — | ஜோசி |
| Jules Block | — | ஜுல்ஸ் பிளாக் |
| Kamil Zvelebil | — | கமில் சுவலபில் |
| Larson | — | லார்சன் |
| Litterarum | — | இலக்கணநூல் |
| Mark Collins | — | மார்க் காலின்ஸ் |
| Michael | — | மைக்கேல் |
| Miller | — | மில்லர் |
| Monahan | — | மோனகர் |
| Moses | — | மோசசு |
| Mousset | — | மூசே |
| Paul | — | பவுல் |
| Percivel | — | பெர்சிவல் |
| Philip de Mello | — | பிலிப் டி மெல்லோ |
| Pope | — | போப் |

| | | |
|---|---|---|
| Populey | — | பாப்புலே |
| Preliminary | — | பதிகம் |
| Robert Anderson | — | இராபர்ட் அந்தர்சன் |
| Robinson | — | இராபின்சன் |
| Rottler | — | ராட்லர் |
| Samuel | — | சாமுவேல் |
| Spulding | — | ஸ்பால்டிங் |
| Sublmioris | — | உயர்வு-சிறப்புமாட்சிமை |
| Tamulici | — | தமிழ் |
| Technology | — | சாஸ்திரம் |
| William | — | வில்லியம் |
| Winslow | — | வின்சுலோ |
| Ziegenbalg | — | சீகன்பால்கு |

## துறையைப் பற்றி

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியத்தின் ஒரு பிரிவான கிறித்தவத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்யத் தமிழக அரசால் நிறுவப்பட்ட அறக்கட்டளைத் துறை கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை. இத்துறை ஆய்வு நூல்களை வெளியிடவும், அரிய நூல்களை வெளிக் கொணரவும் செயல்பட்டு வருகிறது. இத்துறையில், பிஎச்.டி. (Ph.D.), எம்.பில். (M.Phil) ஆகிய பட்டங்கட்காகவும் ஆய்வு செய்து வருகின்றனர்.

துறையின் சார்பில் வீரமாமுனிவ மாலைகள், திருக்குறள் - வீரமாமுனிவர் உரை, சௌமியத் துறை, கிறித்தவ நாடக இலக்[illegible] கவிதைச் செல்வம், புதினப் [illegible]கள் ஆகிய நூல்கள் வெளி[illegible]ள்ளன.

## நூலைப் பற்றி

இந்நூல் கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறையின் ஏழாம் வெளியீடாகும். இலக்கணம், மொழியியல், மொழி பெயர்ப்பு, அகராதி ஆகிய துறைகளில் கிறித்தவர் படைத்த நூல்களைப் பற்றிச் சுருங்கத் தருகிறது.